# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



ஆனி 2019

# வணக்கம்,

ஆனிமாத இதழுடன் சந்திக்கிறோம்.

புதிய படைப்பாளர்களின் வருகை மகிழ்வைத் தருகிறது. காற்றுவெளி பலரிடமும் சென்று சேர்கிறது என்பது அவர்களின் தகவல்களிலிருந்து தெரிகிறது. இவ்வாண்டிலாவது இரண்டு இதழ்களை அச்சில் கொண்டு வரவேண்டும் என்பதில் ஆர்வமும் கொண்டுள்ளோம்.

நிறையக் கனவுகலுடனேயே ஆரம்பிக்கப் பட்ட காற்றுவெளி அச்சிலும், இணையத்திலுமாக இன்றுவரை வெளிவருவதில் நிறைவு கண்டாலும், சந்தா இன்றி எவ்வளவு காலத்திற்கு தனிநபர் உழைப்பையே நம்பியிருப்பது?

100 அச்சிதழ்களையாவது வாங்கும் முனைப்புடன் வாசகர்கள் ஆதரவுக் கரம் தருவார்களெனின் நிச்சயம் அச்சிலும் தரக் காத்திருக்கிறோம்.

ஈழத்தில் நடைபெற்ற இன அழிப்பின் பத்தாவது ஆண்டும் நினைவு கூர்ந்தபடி கடந்துபோகிறது.நாம் எதைச் சாதித்தோம் என்பதற்கான கேள்வியும் அவ்வப்போது எழவே செய்கிறது. அரச பயங்கரவாதத்தின் கைகள் சர்வதேசங்களின் பின்புல ஆதரவுடன் நடந்துகொண்டே இருப்பதை பார்த்துக்கொண்டே மௌனமாக கடக்கிறோம் என்பதே உண்மை. வலுவான கட்டமைப்புக்களின்றி பிளவுண்டு இருப்பதுகாலம் மன்னிக்காது. மாவீரர்களும் மன்னிக்கமட்டார்கள்.

நம்பிக்கைகளை எனியாவது கட்டி எழுப்புவோமாக.

நட்புடன்,
சோபா


## காற்றுவெளி

ஆனி 2019

ஆசிரியர்:

சோபா

வடிவமைப்பு:

நெகிழன்

படைப்புக்களுக்கு:

நன்றி:

இணையம்

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

# எழுதுதல்

வளவ. துரையன், கடலூர்

எழுதவேண்டும்

ஆமாம் நிறுத்தாமல்
எழுதிக்கொண்டே
இருக்க வேண்டும்.

இல்லையேல் உன்னை
மறந்துவிடுவார்கள்

அதுமட்டுமன்று உன்னை
மிதித்து அடித்துப்
போட்டு விடுவார்கள்

நீ இருந்த இடமே
தெரியாதபடிக்கு
சுவடுகளை எல்லாம்
சுனாமி வந்ததுபோல
அழித்து விடுவார்கள்

ஆகவே
ஏதாவது எழுதிக்கொண்டே
இருக்க வேண்டும்

புரிய வேண்டும் என்பதில்லை
புரிந்தது போல் எழுத வேண்டும்

புரியாதது போலவும்
எழுத வேண்டும்.
எப்படியோ
எழுதிக் கொண்டே
இருக்க வேண்டும்

உன்னிடத்தைப் பிடிக்க
அதோ ஒருவன் வருகிறான்
அவன் வந்து உன்
கையை முறிப்பதற்குள்
எழுது
ஏதாவது எழுது.

கவிஞர் “ இளவல் “ ஹரிஹரன்,
மதுரை.

இரைதேடி உண்டுவிட்டுப்
பறந்துவந்த குருவி
தானிட்ட முட்டைகளில் ஒன்று
குறைவதை அறியவில்லை
கூடடைந்தபோது


இருக்கும் முட்டைகளை
அடைகாத்தபடி
அடுத்த நாள் காலை
இரை தேடிப் பின்
மீண்டும் வந்த போது
கீழே விழுந்த முட்டையொன்று
திரவக்கருவால்
பூசியிருந்தது பூமியை

கூடுடைத்து வெளிவரும்
சிற்றுயிரை
மரத்தில் ஏறிக்
கவ்வியிருந்தது
கள்ளப் பூனை

இதையும் அறியாத
சிறு குருவியோ
இருக்கும் இரு முட்டைகளை
உடைத்து வரும் குஞ்சொன்று
கீழே விழப் பார்க்க
பறக்கத் தெரியாமல் விழுந்து
தத்தித் தத்தி மெல்லப்
பறந்து போனது

இன்னொரு குஞ்சோ
தாய்க்குருவியின் அலகிலிருந்து
இரையைத் தின்று
வளர்ந்து சற்றுப்
பெரிதானதும்
பெருங்குருவியைப் பாராமுகமாய்ப்
பறந்து போனது

ஏதுங்கவலையின்றி
கீசுகீசென்ற ஒலியெழுப்பியபடி
குருவி தன் வழியே
மற்றுமொரு வாழ்வைத்
தொடங்கியது.



மு.முகமதுசிக்கந்தர்

# பரிதவிப்பு

முன்போ
எனக்கான காத்திருப்பில்
உன் தவிப்பு..
இன்றோ உன் அனுமதிக்கான
என் பரிதவிப்பு..
நம் கைகளை பற்றிய காதலை
நீ ஏனோ? விடுவித்துக்கொண்டாய்
நான் மட்டும் பற்றியிருக்கிறேன்
நானும் விடுவித்துக்கொண்டால்
அனாதையாகிப்போகும்
நமக்கு பிறந்த காதல்...

## தழல்

பிரிந்து சென்று..
பிரியம் ஏதும் இல்லை
என்றாகிவிட்டது..

வாசற்கதவுக்கு மட்டும்
என்னவாம்..?

வருவாள் என்று ..
திறந்தே இருக்கிறது.

மலர்மதி

# 'திரு திரு'மணம்

வானத்தின் உச்சியில் ஏறிய ஆதவன் சரமாரியாக தன் கதிர்களால் பூமா தேவி மீது தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தான். வெயிலின் உக்கிரம் தாங்கமுடியாமல் சைக்கிளை பேருந்து நிறுத்தத்தின் நிழலுக்குக் கொடுத்துவிட்டு, "ஸ்.. ஆ.. யப்பா.. என்னவெக்கை.." என்றவாறு ஒதுங்கி நின்றார் அந்தப் பெரியவர்.

பேருந்து நிறுத்தத்தின் எதிரில் இருந்த திருமண மண்டபத்தில் வைக்கப் பட்டிருந்த பேனரில் அவர் பார்வை பதிந்ததும்பதறினார். 'அது யார்? குலசேகரன் மாதிரி இல்ல இருக்கு?' கண்களைக் கூர்மையாக்கிப் பார்த்தார். சந்தேகமே இல்லை. அவனே தான்.

அடப்பாவி.. அவனுக்குத்தான் ஏற்கனவே கல்யாணம் ஆயிடுச்சே? இந்த அப்பாவிப் பெண்ணை ஏமாற்றி இரண்டாவதுகல்யாணம் பண்ணப்போறானா?

கூடாது, இவனை விடக்கூடாது. பலர் முன்னிலையில் இவனுடைய முகத் திரையை கிழிக்கவேண்டும். அந்த அப்பாவிபெண்ணின் வாழ்க்கையைக் காப்பாற்ற வேண்டும்.

தீர்மானித்தவராய் வேகமாக அந்த மண்டபத்தில் நுழைந்தார்.

மேடையில் மணமக்கள் அமர்ந்திருக்க, மெதுவாக முன் வரிசையில் போய் நின்று கொண்டார். அருகில் நின்றிருந்த ஒருவரிடம்மெல்ல பேச்சுக்கொடுத்தார்.

"சார்.. இந்த பையனுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆயிடுச்சு."

திரும்பி பெரியவரை ஏற, இறங்கப் பார்த்தவர், "ஆமாம். இப்ப என்ன?" என்றார்.


"பாவம், இந்தப் பெண்ணை ஏமாற்றி இரண்டாவது கல்யாணம் பண்றான். இவனை சும்மா விடாதீங்க." என்று ஆவேசப்பட்டார்பெரியவர்.

அருகில் நின்றிருந்தவர், "யோவ் பெரிசு.. இது இரண்டாவது கல்யாணமில்லை. இரண்டாம் ஆண்டு திருமண விழா. வெளியேபோய் பேனரை சரியா படிச்சிட்டு வா.." என்றதும் திருமண மண்டபத்தில் 'திரு திரு'வென முழித்த பெரியவர் அசடு வழிய அங்கிருந்துஅவசரமாய் வெளியேறினார்.

# பாரியன்பன் கவிதைகள்

■

கண்ணுக்கெட்டிய மட்டும்
ஆள் அரவமற்று கிடக்கிறது
அந்த கடற்கரை.
காரணம் தெரியவில்லை
தீப்பற்றி எரிகிறது
ஒரு பயணக் கப்பல்.



காப்பாற்றவேண்டி
கடல் தாயிடம் மனு வைக்கும்
கூக்குரல்கள்.
துளியும் கருணை இல்லை
அவளிடத்தில்.

திறன் மிக்கவர்கள்
தப்பிக்க முயன்றும்
யாதொரு பயனுமில்லை.
தீக்கு எதிரி நீர்
பக்கத்தில் இருந்தும்
இரக்கம் கொள்ளவில்லை.
வெந்தும் வேகாததுமாய்
மனித உடல்கள்.

தீயும் நீரும்
மாறி மாறி மென்றுத் துப்ப
கேட்பாரற்று கரையொதுங்கி
கிடக்கின்றன
எண்ணற்ற சடலங்கள்.

■

மௌனத்தை
உடைத்துக்கொண்டு
குபீரென்று சிதறலாயின
கோபக் கணையின்
முடிச்சுகளோடு வார்த்தைகள்.

சிதறிய வார்த்தைகளில்
வன்சொற்களின் ஆதிக்கம்
மேலோங்கி இருப்பதை
எதிரிலிருக்கும் உன் முகத்தில்
காண முடிகிறது என்னால்.

என் மௌனம் உடைய
காரணமாயிருந்த
உன் தகாத வார்த்தைகளை
செவி சாய்த்திடாமல்
நான் தவிர்த்திருக்கலாம்.

முட்டாளாகிப்
போக வேண்டுமென்பது
என் வரையறைக்குள்
மூடுக்கப்பட்டிருப்பதை அறியாமல்
மென்மௌனம் உடைய
முட்டாளாகிப் போனேன் நான்.

இயல்பாய் ஒரு மௌனம்
புத்தம் புதுப் பொலிவுடன்
என்னில் குடிகொள்ள
இன்னும்
சிறிது காலமாகலாம்
அதுவரையில்
நான் காத்திருக்க போகிறேன்.

எப்போதும் எதிரியின்
வஞ்சக வலையிலும்
சூட்சும வட்டத்திலும்
விழுந்துவிடக் கூடாதெனும்
எல்லை மீறா தீர்மானத்துடன்
என்றைக்கும் இருத்தலே
இப்போது
நன்மையென்று அறிகிறேன் நான்.

கவிஞர்.முத்தமிழ்விரும்பி



# தோகை மயில்

காத்திருந்த பொழுதின்
சுணக்கம் போக்க
உயர்ந்த
வாகைக்
கிளையிலிருந்து
படபடவென எழும்பி
உயர்கிறது
தோகை மயில்

மாலைச் சூரியனைச்
சுற்றி வரலாம்

காத்திருப்பில்
காதல் வரிகள்
மெல்லிய
அகவலாய்




பவள சங்கரி

# சங்க கால உணவு முறைகள்

தென்னிந்தியாவின் கற்கால மனிதர்களின் காலம் கி.மு. 10000. அக்காலங்களில் வேட்டைக்காரர்கள், மூங்கில் வேலை செய்பவர்கள், ஆடை தயாரித்தவர்கள், மீன் பிடிப்பவர்கள்,உப்பளங்கள் அமைத்து உப்பு சேகரித்தவர்கள், மாலுமிகள் போன்றவர்கள் மட்டுமே அடங்கிய சமூகம் அது. அவரவர்கள் வாழும் பகுதிகளின் வளங்களுக்கேற்ப அமைந்த தொழிலின் அடிப்படையில் கூடிய சமூகம் அது.

மக்களின் உணவு முறை என்பது அந்தந்த காலகட்டங்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், நிதிநிலை, வாழ்க்கைத் தரம் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியது. நவீன கால கண்டுபிடிப்புகளின் பாதிப்பு ஏதுமின்றி, உடல் உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு தங்கள் வாழ்வியலை அமைத்துக் கொண்டவர்கள் ஆரோக்கியமான உடலும், மனமும் பெற்றிருந்திருக்கிறார்கள் என்பதையும் உணர முடிகின்றது. கற்காலத்திற்குப் பிறகான சங்க காலத்திலும் பெரும்பாலும் இந்த நிலை குறிப்பாக உணவுப் பழக்கத்தில் மிகச் சில மாற்றங்களுடன் தொடர்ந்திருப்பதையும் அறிய முடிகின்றது. இதற்கான ஆதாரங்கள் சங்க காலப் பாடல்களில் அதிகமாகவே கிடைக்கின்றன.

சங்ககால மக்கள் இயற்கையாகக் கிடைக்கும் தாமரையிலை, தேக்கிலை, ஆம்பலிலை, வாழையிலை, பனையோலை, மூங்கில் போன்றவற்றை உணவு உண்பதற்குத் தகுந்த கலன்களாக வடிவமைத்துப் பயன்படுத்தி உள்ளனர் என்பதற்கு ஆதாரங்களாக,

"சேக்குவள் கொல்லோ தானே தேக்கின்

அகலிலை குவிந்த புதல்போல் குரம்பை

ஊன் புழுக் கயரு முன்றில்" (அகம். 315: 15-17)

"வாழை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்

புகையுண்டு அமர்த்த கண்கள்" (நள். 120: 5-6)

"செழுங்கோள் வாழையகலிலைப் பகுக்கும்"(புறம். 168, 13)

"ஆம்பல் இலைய வமலை வெஞ்சோறு

தீம்புளிப் பிரம்பின் திரள்கனி பெய்து

விடியல் வைகறை யிடு உமுர" (அகம். 196: 5-7)

போன்ற பாடலடிகள் தெளிவாக உணர்த்துகின்றன.

அடுத்து சமைப்பதற்கும், சமைத்த உணவை பாதுகாப்பதற்கும் பழந்தமிழ் மக்கள் எத்தகைய பாத்திரங்களை பயன்படுத்தியிருப்பார்கள் என்ற ஐயங்களுக்கும் சங்கப் பாடல்களே விடையளிக்கின்றன. குழிசி, சாடி, கலன், கன்னல், தசும்பு, குப்பி, தடவு போன்ற பல வகையான, பல அளவுகளிலான பானைகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

தசும்பு என்ற பானை, பால், தயிர், கள் போன்ற பொருட்களை நிறைத்து வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டதை,

"இஞ்சிவி விராய பைந்தார் பூட்டிச்

சாந்துபுறத் தெறிந்த தசும்பு துளங் கிருக்கை

தீஞ்சேறு விளைந்த மணி நிற மட்டம்" (பதிற்று, 42: 10-12)

என்ற பாடலடிகள் மூலமும்,

குழிசி என்பது உணவு சமைக்கப் பயன்படுத்தும் மண்ணால் செய்யப்பட்ட பானை என்பதனை,

"மான்றடி பழுக்கிய புலவுநாறு குழிசி" (புறம், 165:6)

"கயறு பிணிக் குழிசி" (அகம், 77:7)

"முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி" (பெரும், 99)

என்ற பாடலடிகள் மூலமும் அறிய முடிகிறது.

இக்காலங்களில் நாம் சுவையாக உணவைச் சுவைத்து உண்ண பக்கவாட்டில் சில துணைப் பதார்த்தங்களையும் பயன்படுத்துகிறோம். அதில் மிக முக்கியமானது உப்பில் ஊற விட்டு காரமும், புளிப்பும் சேர்ந்த சுவையான ஒரு பதார்த்தமாகப் பயன்படுத்தும் ஊறுகாய்! ஊறுகாய் பயன்படுத்தும் வழமை நமக்கு நம் முன்னோர்களிடமிருந்து, ஆதி காலந்தொட்டு இன்றுவரை விடாமல் தொடர்ந்து வருவதும் ஆச்சரியம்தான்.

இக்காலம் போன்றே நெல்லிக்காய், எலுமிச்சம் பழம், புளியங்காய், மாங்காய் போன்றவற்றை, பதப்படுத்தி ஊறுகாய்களாகச் சமைத்து அவைகளை மண்ணால் செய்யப்பட்ட காடிகளில் அடைத்து வைக்கின்றனர். ஊறுகாய்கள் கெடாமல் இருப்பதற்கு காடிகள் பயன்படுகின்றன என்பதனை,

"காடி வைத்த கலனுடை மூக்கின்

மகவுடை மகடூஉப் பகடு புறந் துரப்பக்" (பெரும், 57-58)

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகின்றது.

கன்னல் என்பது நீர் நிறைத்து வைக்கப்படும் மண் பானை. 'தொகுவாய்க் கன்னல்', 'குறுநீர்க்கன்னல்' என்று இரண்டு விதமான கன்னல் பானைகள் உள்ளன. குவிந்த வாயையுடைய பானையான தொடுவாய்க் கன்னல் என்பதனை,

"தொடுவாய்க் கன்னற் றண்ணி ருண்ணார்

பகுவாய்த் தடவிற் செந் நெருப்பார" (நெடுநெல்வாடை, 65-66)

என்ற அடிகள் மூலமும்,

மண்பானையில் நீர் நிறைத்து அதன் அடியில் சிறிய துளையிட்டு அதன் வழியாக அந்நீரை சிறிது சிறிதாகக் கசிய விட்டு அந்நீரினை அளப்பதற்கான கருவியாகலின் இது குறுநீர்க் கன்னல் என்றழைக்கப்பட்டது. இதனை,

"ஏறி நீர் வையகம் வெலீஇய செல்வோய் நின்

குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப" (முல்லை, 57-58)

என்ற பாடலடிகள் மூலமும்,

குளிர் காலத்தில் குளிப்பதற்கு நீரைச் சூடாக்க பெரிய மண்தாழிகளைப் பயன்படுத்தினர். தடவு எனப்படும் இதனை,

"பகுவாய்த் தடவிற் செந் நெருப்பயர" (நெடுநெல்வாடை, 66)

என்ற பாடலடிகள் மூலமும்,

மக்களின் தேவைக்கு ஏற்ப மண்பாண்டங்கள் செந்நிறத்திலும், கருப்பு நிறத்திலும் செய்து கொடுத்துள்ளனர். இதனை,

"செந்தாழிக் குவிபுறந் திருந்த" (புறம், 238:1)

"பெருங்கட் குறுமுயல் கருங்கலன்" (புறம், 322:5)

என்ற பாடலடிகள் மூலமும் அறியலாம்.

**சங்க கால உணவு**

சங்க காலத்தில், சோற்றைக் குறிக்க அடிசில், அயனி, அவிழ், கூழ், மிதவை, மூரல், சொன்றி, நிமிரல், புழுக்கல், புன்கம், பொம்மல் போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நெல், வரகு, திணை முதலிய தானியங்களும், பால், தயிர், மோர், ஈசல்களையும், அவரைக்காய், வேளைக்கீரை, வேளைக்கீரைப் பூ போன்ற தாவர வகைகளையும், செம்மறியாடு, முயல் இவற்றின் இறைச்சிகளையும் பல்வித கள் வகைகளையும் சங்க கால மக்கள் உணவில் முக்கியமாகக் கொண்டிருந்தனர். வேளைக்கீரை, அதன் பூ, தயிர், மோர், ஈசல், வரகு இவற்றையெல்லொம் சேர்த்து தனிப்பட்ட முறைகளில், புளியங்கூழ், புளியங்கறி, புளியஞ்சோறு போன்ற உணவு வகைகளைச் சமைத்துள்ளனர். நன்கு விளைந்து முற்றிய நெல்லை, அரிசியாக்கி ஆம்பற்பூவோடு சேர்த்து, சுவையாகச் சமைத்து உண்டனர். களிமண் பானைகளில் மூலம் இந்த உணவு வகைகளைச் சமைத்துள்ளனர் என்பதனை, அகம்.393:14 பாடல் மூலம் அறியலாம்.

பூளைப் பூ போன்ற வரகுச் சோற்றை வேங்கைப் பூவை ஒத்த அவரைப் பருப்புடன் அவித்து வரகுச் சோற்றுடன் கலந்து உண்டதை,

குறுந்தாள் வரகின் குறள்அவிழ்ச் சொன்றி

புகர்இணர் வேங்கை வீ கண்டன்ன

அவரைவான் புழுக்கு அட்டி, பயில்வுற்று

இன்சுவை மூரல் பெறுகுவீர் (பெரும்.193-196)

என்ற பெரும்பாணாற்றுப்படை அடிகள் குறிப்பிடுகின்றன.

பசு, எருமை, ஆடு ஆகியவற்றின் பாலையும் அவற்றினின்று

கிடைக்கும், பால் மற்றும் பால்படுப்பொருட்களான, தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவற்றையும் மிக விருப்பமான உணவாகக்

கொண்டவர்கள் சங்க கால ஆயர்கள் என்பதை முல்லைத்திணைப் பாடல்களின் மூலம் அறிய முடிகின்றது . பாலை உணவாகக் கொண்டதைப் பற்றி அகநானூறும் (393:17), மலைப்படுகடாம் (409-410) மற்றும் பெரும்பாணாற்றுப்படை (168, 175) பாடல்களும் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

மேலும், தானிய வகைகள், பூக்கள், பூச்சிகள், ஊன் உணவுகள், கள் ஆகியவைகளும் அவர்களது விருப்பமான உணவுகளாக இடம் பெற்றிருந்தன.

பாலிலிருந்து கடைந்தெடுத்த வெண்ணெயை உருக்கி எடுக்கப்பட்ட, மணமிக்க சுவையான நெய்யில், கடலையை வறுத்து அதனை சோற்றுடன் சேர்த்து உண்டதையும் (புறம்.120:14),புறநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகின்றது.

தீம்புளி என்ற ஒரு உணவும் பல பாடல்களில் மிகச் சிறப்பான உணவாகக் காட்டப்பட்டுள்ளது.

பரதர் தந்த பல்வேறு கூலம்

இருங்கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்புப்

பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்

கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல் . .

(மதுரை காஞ்சி 318)

பண்டமாற்று முறை வாணிபத்தில், நம் நாட்டிற்கு குதிரைகளை மரக்கலங்களில் ஏற்றிக் கொண்டுவந்த யவனர்கள் அதே மரக்கலங்களில் பொன் அணிகலன்களையும், தீம்புளி, உப்பு, உணக்கிய மீன் ஆகியவற்றையும் தத்தம் நாடுகட்கு ஏற்றிச் செல்லுவார்களாம்.

தீம்புளி என்றால் என்ன? சாப்பிட்டதுண்டா? சங்கப்பாடல் சொல்லும் சுவையான பண்டம் இது!

ஆம், புளியையும் கருப்பங்கட்டியையும் சேர்த்துப் பிசைந்து அதைப் பொரிப்பார்கள். இப் பண்டத்துக்குத்தான் தீம்புளி என்று பெயர்.

நெற்சோற்றோடு மோர் ஊற்றி, அதில் வெண்ணெய் கொண்டு கறிவேப்பிலையும், மாதுளங்காயும் பொறித்துக் கொட்டி, அதில் மிளகுப்பொடி தூவி, அதனுடன் மாமரத்தின் பிஞ்சு இலைகளை மேலே போட்டு வைத்த ஊறுகாயைத் தொட்டுக் கொண்டு, பார்ப்பணத்தி ஒருத்தி சாப்பிட்டாள் என்பதனை கீழ்கண்ட பெரும்பாணாற்றுப்படை பாடல் மூலம் அறியலாம் ,

சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்
வண்ட லாயமொ டுண்டுறைத் தலைஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிந்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது

சோறுடன் தயிர் சேர்த்து உண்ணும் போது, காரமும் புளிப்பும், உப்பும் அதிகமாகச் சேர்ந்த ஊறுகாயுடன் உண்ணும் பழக்கம் சங்ககால மக்களிடையே இருந்துள்ளதை பட்டினப்பாலை பாடல் மூலம் அறிய முடிகிறது.

இன்றைய காலகட்டத்தில் அசைவ உணவான பிரியாணி என்று அழைக்கும் உணவு அக்காலத்தில் ஊன்சோறு என்று அழைக்கப்பட்டிருப்பதை,

ஊன் சோற்று அமலை பாண் கடும்பு அருத்தும் - புறம் 33/14

அட்டு ஆன்று ஆனா கொழும் துவை ஊன் சோறும் - புறம் 113/2

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

அசைவ உணவாக, வெள்ளாடு, செம்மறியாடு, மான், முயல், ஆமை, மீன் வகைகள், நண்டு, ஈயல், கோழி, காட்டுக்கோழி, காடை, உடும்பு போன்றவற்றின் இறைச்சியைத் தனியாகவோ, பாலும் அரிசியும் சேர்த்தோ சமைத்து உண்பார்கள்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்" (குறுந்.167:1-2)

குறுந்தொகைப் பாடலின் தலைவி தன் கணவனுக்காக உணவு சமைப்பதை அழகாக விளக்கப்பட்டுள்ளது. நன்றாகக் காய்ச்சிய பாலில் முந்தைய நாளில் உறை

ஊற்றி, மறுநாள் காந்தள் மலரைப் போன்ற தன் மெல்லிய விரல்களால் புளிப்பேறிய தயிரைப் பிசைந்து, அதனுடன் இனிய புளிப்புச் சுவையுடைய குழம்பினைச் சேர்த்துத் தன் கணவனுக்கு அன்பாகப் பரிமாறுகிறாள். தலைவி குழம்பு வைக்கும் போது புளி, தயிரை மட்டும் சேர்க்கவில்லை. அத்தோடு தன்னுடைய உண்மையான காதலையும் சேர்த்துப் பறிமாறுகிறாள் என்று உணவுச் சுவையுடன், தலைவன், தலைவியின் வாழ்வியல் பண்பாட்டு நெறியையும் சேர்த்தே விளக்குகிறது இப்பாடல்.

நெய்யொடு கூடிய தயிர்ச்சோற்றை உண்ணல் (அகம்:340),

புல்லரிசியை உண்ணல் (பெரும்.89-94) போன்ற செய்திகள் சங்க காலப் பாடல்கள் காட்டுகின்றன.

அடிசில் என்பது சங்க காலம் தொட்டு இன்றுவரை புழக்கத்தில் உள்ள ஒரு சொல். ஆம், அக்கார அடிசில் என்பது இன்றும் குழைந்த சோறுடன், பால், வெல்லம், நெய் சேர்த்து படைக்கும் உணவு.

புதுக்கலத்தன்ன செவ்வாய்ச் சிற்றில்

புனையிரும் கதுப்பின் நின் மனையோள் அயரப்

பாலுடை அடிசில் தொடீஇய ஒருநாள்

மாவண் தோன்றல்! வந்தனை சென்மோ! - (அகம் 394/9-12)

மேற்கண்ட அகநானூற்றுப் பாடல் தோழி தலைமகனைப் பார்த்துச் சொல்வதாக அமைந்த பாடல் இது.

மேலும் வத்தம், வட்டம், வல்சி, வறை, வாட்டு, வாடூன், விசையம், வேவை போன்ற சொற்களும், பல்வேறு வகைத் தின்பண்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பரல் வறை கருனை காடியின் மிதப்ப - பொரு 115

உடும்பின், வறை கால்யாத்தது வயின்தொறும் பெறுகுவிர் - பெரும் 132,133

நெய் கனிந்து வறை ஆர்ப்ப - மது 756

நெய் துள்ளிய வறை முகக்கவும் - புறம் 386/3

மண்டைய கண்ட மான் வறை கருனை - புறம் 398/24

என்ற அடிகள் மூலம் பொரித்த இறைச்சித்துண்டுகள் வறை எனப்படுவதை அறிய முடிகின்றது.

வாடூன் என்பது வாடிய ஊன் என்றறிய முடிகிறது.

வாடூன் கொழும் குறை

கொய்குரல் அரிசியொடு நெய்பெய்து அட்டு

துடுப்பொடு சிவணிய களிக்கொள் வெண்சோறு - புறம் 328/9-11

இதனை மேற்கண்ட புறநானூற்று அடிகள் விரிவாகச் செய்முறையுடன் விளக்குகின்றன. அதாவது இன்றளவிலும் மீந்து போன ஆட்டுக் கறி துண்டங்களை உப்பு, மஞ்சள் தூள் போட்டு நன்கு காய வைத்து அதனைத் தேவையான நேரத்தில் பயன்படுத்திக் கொள்வார்கள். இதற்கு உப்புக்கண்டம் என்று கூறுவார்கள். அந்த ஊன் துண்டங்களை இரும்புக் கம்பிகளில் கோத்து நெருப்பில் வாட்டியுண்பார்கள்

அதேபோன்று கருப்பஞ்சாறிலிருந்து எடுக்கப்படும் நாட்டுச் சக்கரை, வெல்லம் போன்ற பொருட்களை விசையம் என்று கூறினர். அதனை

விசையம் கொழித்த பூழி அன்ன (மலைபடுகாம் - 444)

என்று பாடலால் அறிய முடிகிறது. அதே போன்று வேக வைத்த உணவை வேவை என்றனர். பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், நுங்கு, சேம்பிலைக்கறி, வள்ளிக்கிழங்கு, சுட்ட பனங்கிழங்கு ஆகியவற்றையும் பண்டைத் தமிழர் உண்டனர். மாங்கனியைப் பிழிந்து சாறு எடுத்து, அதைப் புளிக்க வைத்து புளிக்குப் பதிலாக அதைப் பயன்படுத்தும் வழக்கமும் உண்டு. இன்றும் மாங்காயை உலற வைத்து பொடியாக்கி பயன்படுத்தும் அந்த வழமை இருக்கிறது.

சங்க கால மக்கள் அசைவ உணவையே பெரிதும் விரும்பி உண்டனர். பண்டைத் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பகுக்கப் பெற்றிருறந்தது. அதன் அடிப்படையிலேயே மக்களின் வாழ்வும், உணவுப் பழக்கங்களும் இருந்துள்ளன.

குறிஞ்சி நிலம் வாழும் மக்கள் மலையில் விளைந்த திணையைச் சோறாக்கியும், நெய்யில் பொறிக்கப்பட்ட இறைச்சியையும் உண்டனர்.

மருத நிலம் வாழும் மக்கள் வெண்சோற்றையும், நண்டும் பீர்க்கங்காயும் கலந்த கூட்டையும், பழைய சோறு, அவல் போன்றவற்றை விரும்பி உண்டனர்.

நெய்தல் நிலம் வாழும் மக்கள், இறால் மீன், வயல் ஆமை ஆகியவற்றைப் பக்குவம் செய்து உணவாக உட்கொண்டனர்.

பாலை நிலம் வாழும் மக்கள் இனிய புளிக்கறி சேர்க்கப்பட்ட சோற்றையும். காய்கறியையும், இறைச்சியையும், உண்டனர்.

உணவினைக் கலங்களிலும் தேக்கிலையிலும் பரிமாறினர். உண்ணும் முன் கலங்களைக் கழுவி அதில் சோறுண்டனர் (புறம்.120).

புல்லி நாட்டில் ஆயர்கள் மாடு மேய்க்கப் புறப்படும்போது புளிச்சோறு உணவினை

மூங்கில் குழாயில் இட்டு, அதனை மாட்டின் கழுத்தில் கட்டி விடுவார்களாம். காட்டு வழியே பயணிக்கும் சமயம், அங்கு பசியோடு வருபவர்களுக்கு தமது உணவினை அவர்களுக்கும் பகுத்துக் கொடுத்து உண்பார்களாம்.

பயம்தலை பெயர்ந்து மாதிர வெம்ப
வருவழி வம்பலர்ப் பேணி காவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்
புல்லிநன்னாடு '(அகம் 311,9-12)

மூங்கில் குழாயினுள் புளிச்சோற்றினை அடைத்து வைத்து வேற்றிடம் செல்பவர்கள் அதனை இலையில் இட்டு உண்ணல் (அகம்:309) என்ற செய்தி கூறப்பட்டுள்ளது..

**முடிவுரை:**

அடிமனை, கணிச்சி, நீர் முகக்கும் கருவி, மத்து, உரல், உலக்கை போன்ற மரக் கருவிகளையும் வடிவமைத்து அவைகளை சமையலறையில் பயன்படுத்தியுள்ளனர்.

தமிழகத்தில் பல்வகையான நெல் விளைந்தது. சோற்றோடு காய்கறி வகைகளையும் அதிகளவில் உண்டிருக்கின்றனர். மிளகும் புளியும் உப்பும் உணவில் சேர்ந்திருக்கும். மாங்கனியைப் பிழிந்து சாறு எடுத்து, அதைப் புளிக்க வைத்து அதைப் புளியாகப் பயன்படுத்துவது போன்று களாப்பழப் புளி, நாவற்பழப்புளி, துடரிப்பழம் (ஒருவகை இலந்தைக் கனி - (ஞீவீக்ஷ்ஹ் றிலீஙூஉ ஸிஙூரீஷீஉணீ), முதலிய பழங்களையும் பயன்படுத்தியுள்ளனர். கொம்மட்டி மாதுளங்காயை அரிந்து, அதனுடன் மிளகின் பொடியைக் கலந்து கறிவேப்பிலை கூட்டிப் பசு வெண்ணெயில் அதைப் பொரித்து விரும்பி உண்பார்கள். வடுமாங்காய் ஊறுகாய் கூட அக்காலத்தில் இருந்திருக்கிறது. பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், நுங்கு, சேம்பிலைக்கறி, வள்ளிக்கிழங்கு, சுட்ட பனங்கிழங்கு ஆகியவற்றையும் பண்டைத் தமிழர் விரும்பி உண்டனர்.

**துணை நூற்பட்டியல்:**

தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், கே.கே. பிள்ளை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை - 1974.

அகநானூறு, ந.மு. வேங்கடசாமி, சை.சி.நூ. கழகம், சென்னை - 18, 1957.

பண்டைய தமிழ் நாகரீகமும் பண்பாடும், தேவநேயபாவாணர், தமிழ்மண் பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை - 1996.

அ. தட்சிணாமூர்த்தி, (1994). தமிழர் நாகரிகமும் பண்பாடும், சென்னை: ஐந்திணைப் பதிப்பகம்.




ந. கிருஷ்ணசிங்கம்.

# அந்தக் கிராமத்தைக் காணவில்லை

யாழ்நகரத்தை அண்மித்த என் அழகான கிராமத்தில்
அன்று அறுபதுகளிலே அதிகமாக வீடுகளோ
மண்சுவர்களோடு தென்னம்கிடுகினாலும்
பனையோலைகளினாலும் வேய்ந்தகூரைகளோடு தோன்றும்.
பூவரசமரவேலிகளின் எல்லைகளுள் தோட்டங்கள் தெரிந்தன.
பூக்களும் காய்கனிகளுமாகப் பசுமைபோர்த்து
எமது நிலம் இதழ்விரித்துச் சிரித்தது.
சொல்லவொண்ணா ஆர்வத்தோடு கிணற்றுத்
துலாக்களாடவே வாய்க்கால்களில் நீர்பாய
பெண்களும் சிறுவர்களும் வளர்ந்தோருமாக
துரிதவேகத்தோடு தோட்டவேலைகளில் ஆழ்ந்திருக்க
அதிகாலையொன்று கண்விழிக்கும்.

தளர்ந்திருக்கும் மேனியோடு விழிபிதுங்க
வாய்பிழந்து கொட்டாவி விட்டபடி அங்கே
வாடியிருப்போரைக் யான் கண்டதில்லை.
எங்கும் வாழ்வின் உணர்வுதூண்டத் தன்குடும்ப
வடக்கயிற்றைக் கூடியிழுப்பதற்குக் கைதந்து
பாடுகள்படும் மக்கள் தொழிலுக்கு ஓடிநடக்க
சதங்கைகள் ஒலிக்க மாட்டு வண்டிகளும்
மோட்டார்ரதங்களும் பேர்டும் ஒலியோடு
காலைப்பொழுது கலகலப்பாய்த் தொடங்கும்.
சாயலிலே மயில்கள்போன்றோர் தம்
சடைப்பின்னல்கள் அசையநடப்பதுவும்
தோழகன்ற வீரநிகர்வாலிபரும் சேர்ந்து
கல்விக்கூடங்கள் போவதுவும்,
கோவில்களின் மணிகள் முழங்க
சங்கொலிக்க மேளதாளக் குழல்கேட்கும்.
பருவம்தவறாது காலம் நிரையாகமாறும்;
இடிமுழங்கி மழைபொழியும். வெள்ளம் வடிந்தோட
வரட்சியோ விரைந்தோடும்
இயற்கை தவறாது இசைந்தே ஒத்தழைக்கும்.
ஏழையர்தம் குடில்களிலும் உருசியுணவின் மணம்வீசும்
ஆங்கே உரத்த ஓசையோடு சிரிப்பின் சுருதிகோட்கும்.
எங்கோ ஐயோவென அவலமாய் குரல்கேட்பின்
இடர்களைய அந்த அயலேதிரண்டுவிடும்
பொய்யற்ற தோழமையும் துன்பமகற்றும் துணிவும்
வீம்பில்லா வாழ்வும் விழங்கிய அந்தக்
கிராமத்தை இன்றோ.. காணவில்லை.

தனி



# மாற்றம்

ஹாஸ்பிடலிற்கு சென்ற அண்ணன் வீடு திரும்புவதை எதிர்பார்த்த வண்ணம் காத்திருந்தார் வேணி.. இதோ அவள் எதிர்ப்பார்த்தது போன்றே தேவனின் வாகனம் வந்துவிட்டது.

தேவன் மிகவும் களைப்புற்றிருந்தார் என்பது அவரின் முகமே தங்கைக்கு உணர்த்தியது, ஆகவே அவரின் களைப்பை போக்க தண்ணீர் வழங்கியவர், ஏற்கனவே தயார் நிலையி இருந்த காபியை எடுத்து வர உள்ளே சென்றாள்..

காபியுடன் ஹாலிற்க்கு வந்த வேணி சோர்வுற்று சாய் நாற்காலியில் சாய்ந்திருந்த தேவனின் அருகில் வந்து, அவரின் முதுகில் தட்டி "அண்ணா, காபி டுத்துக்கோங்க.. அண்ணிய கூப்பிட்டு வரலயா.." என்றாள்.

பதிலேதும் கூறாமல், அவரும் அதை வாங்கி பருக தொடங்கினார்.. "என்னண்ணா.. அது தான் தம்பிக்கு ஒன்னும் இல்லையே.. அப்புறம் ஏன் இவ்வளவு யோசிக்கிறிங்க.. நம்ம மாறன்

ஹாஸ்பிட்டல இருந்து வீட்டுக்கு வந்ததும்.. நேர்ந்துக்கிட்ட மாதிரி பழனிக்கு போயிட்டு வந்துடுவோம்.." என்றாள்.

களங்கிய கண்களோடு தங்கையை பார்த்த தேவன்.. "அந்த பழனி முருகன், சங்கர் உருவத்துல வந்து என் மகனை காப்பாத்துனாரா இல்ல.. சங்கர் கடவுளா மாறினானா

எனக்கு தெரியல வேணி..". என அவர் முடிக்கும் முன் வேணி.. "என்னண்ணா சொல்றீங்க.. எந்த சங்கர்.." என ஆரம்பிக்க,

" அது தான் வேணீ.. நாம எந்த சாதிய காரணம் காட்டி நம்ம மாறன் விரும்பின மலர் பொண்ணை வேனாம்னு சொன்னோமோ.. அந்த மலரோட அண்ணன் தான் இந்த சங்கர். அவனோட இரத்தம் தான் இப்ப நம்ம மாறனோட உயிர காப்பாத்திருக்கு.." என்றவர்..

மேலும் தொடர்ந்தார்..

"என்கிட்ட இருக்கும் பணமோ, என் சாதியோ, என் அந்தஸ்த்தா என் மகன காப்பத்தல வேணி.. நான் மனசயும் பார்க்கல, மனிதத்தையும் பார்க்கல... மனுசத்தன்மையாவும் நடந்துக்கல, ஆனா இப்போ எனக்கு கடவுள் நல்ல சந்தர்ப்பத்த கொடுத்திருக்கான் இத நான் தவறவிடக்கூடாது.. அண்ணியும் நானும் முடிவு பன்னிட்டோம்.. நாங்க மலர் வீட்டுக்கு போய் பொண்ணு கேக்கப்போறோம்.." என்றவர் தடுமாறி தங்கையின் கைகளை பிடித்துக் கொண்டு "என்னோட முட்டாள்தனத்தால இன்னொரு வேணியை உருவாக்கிடக் கூடாது.." என்ற தேவனின் கண்ணில் தெரிந்த குற்ற உணர்ச்சியை, மாற்றும் பொருட்டு "உண்மைதான் அண்ணா.. மாறனும், மாற்றம் வேனும் மத்தவங்க மாறனும்னு எதிர்பார்க்கிறதை விட, நாம மாறிடனும்.. நீங்க எடுத்த முடிவு ரொம்ப நல்ல முடிவுண்ணா.. போயிட்டு வாங்க.." மகிழ்ச்சியுடன் வழியனுப்பினாள் வேணி தன் இருபது வருட தனிமை வாழ்க்கையை மறந்து..

இரா மதிபாலா

# புரிதல்மிகு மௌனம்

நம் கோப்பையை நிறைக்கிற
மறுநாளே
சண்டை சத்தத்தில் அதிர
தளும்பி சிதறி
குறைகிறது
நிறைவதும்,
குறைவதுமாய்
வாழ்க்கைக் கோப்பையில்
இல்ல ரசம்.
காலப்பருக்கையில்
கண்டுணர்ந்த
ருசியும்
இனிப்பும் கசப்பும்
புளிப்பும்
துவர்ப்புமாய்...
நடுவில்
முளைத்த மரத்தை
வட்டமிட்டும் போற்றலாம்
வெட்டியும் தள்ளலாம்.
நீரும் கோடரியும்
அருகருகே..

ராதா மரியரத்தினம்


# தனிமை

நாலு சுவருக்குள் அடங்கிய போச்சு
இந்தப் பரந்து விரிந்த மனசு
ஊனமானது கால்கள் மட்டுமல்ல
என் மனமும் தான்
இந்தச் சாளரம் ஒன்றே
என் சொர்க்க வாசல் கதவு
இரவையும் பகலையும்
ஒளி நகர்த்திச் செல்லும்
அழகை வெறித்துப் பார்த்தபடி ஓர் வெற்றுப் பார்வை
பச்சைப் புல்லின் நுனியை மென்றது
அப்படியே எண்ணங்கள் அசை போட
கண்ணயர்ந்த வேளை
கிச்சுக் கீச்சென்று எனைத் தட்டி எழுப்பும் ஓசை
நினைவு மழை பொழிய ஆயத்தமானது போல
வெண் பஞ்சு மேகம் என் சாளரத்தின் ஓரத்திலே
கூடவே சின்னஞ்சிறு சிட்டொன்று
தனிமைக்குத் துணை சேர
மௌனமாகினேன் நான்
வெண்மேகம் கார்மேகலாகலாம்
இனி மழை இடி என என் நான்கு சுவர்கள்
நனைந்தும் போகலாம்
மழையின் காரணமாக உயிர்கள் தோன்றலாம்,
இவைகள் ஏன் என் வாசல் வந்தன
என் தனிமை உடைபட்டது
இயற்கை எனை வாவென்று அழைத்தது
மனிதம் அழியலாம், இயற்கை அழிந்தாலும்
அதன் தன்மையை இழப்பதில்லை

அழ. பகீரதன்

# இன்பம் துய்க்க..

படிப்பதற்கு வாய்ப்பாய்
துறையொன்று இருந்து
போதுமாய்
வருமானமிருந்தும்
மருத்துவராய் இயலவில்லையென,
மாபிள் பதித்திட்ட தரையொடு
இருப்பதற்கு சிறுவீடிருக்க
மாடி வீடிலையென,
போதுமாய் மாற்றுடையிருக்க
திருவிழாவில் நாளுக்கொரு
வண்ணம் காட்ட
பட்டுப் புடவை இலையென,
தாலிகோர்க்க கொடியிருக்க
தங்கம் அதிகம் ஜொலிக்கவிலையென,
பார்க்கப் பழைய தொலைக்
காட்சிப் பெட்டியிருக்கத்
தட்டை நெட்டையாய் கலக்கலாய்
காட்சிப் பிம்பம் பார்க்கவியலாதென,
ஆளுக்கொரு உந்துருளியிருக்க
மெத்தென இருக்க மகிழுந்து இலையென
இயலாத ஒன்றுக்காய் ஏங்கியே
இருக்கின்ற இன்பத்தில் இலயிக்கா
மனமெனும் குரங்கை எழுப்ப
நுகர்வு எனும் நுகத்தடியொடு
முதலாளியம் மேலும் மேலும்
மூர்க்கமாய் தாக்கும்!
மீள மீள கடன் பொறிக்குள்..



கடன் தீர்க்க பின்னும்
உழைப்பே மூச்சாய்
மன உளைச்சலொடு..
நம் சக்தியெலாம்
வட்டி குட்டியென
தட்டிப் பறிக்க
இன்பம் துய்க்க
இயலுமோ எம்மால்!

லக்ஷ்மி

# யாருமில்லை

யாருமில்லை
என்று நினைக்கையில்
இரு கைகள் என்னைப் பற்றிக்கொள்கிறது
துணிவோடு மெல்ல மேலேறிவிடுகிறேன்

நான் எனக்குப் புரியவைத்து
சங்கடமான நேரங்களில்
அர்த்தமற்ற கேள்விகளுக்கெல்லாம்
பாசாங்கற்ற பதில் கிடைக்கையில்
உள்ளூறும் வெளிச்சத்தில்
இளைப்பாறிவிடுகிறேன்



ஒரு தோள் என்னை எப்பொழுதும்
சுமக்கிறது என்ற நினைவுகளால்
வெகுதூரங்களுக்கு சுதந்திரமாக
நீள்கிறது என் நிழல்

ஒரு கை எப்பொழுதும்
பற்றிக் கொண்டேயிருப்பதால்
மலைகளைக்கூட வெகுசுலபமாக
கடந்துவிடுகிறேன்

வாழ்வின் பெருவெள்ளங்களையும்
எதிர்த்து நீந்தி கரைகடந்துவிடும்
நற்றுணையால்
வாழ்வின் இறுதிவரை
ஆயிரம் கைகளின் அன்பு
அரவணைத்திருப்பதாய்
ஒவ்வொரு நொடியும்
உணரவைத்துக் கொண்டேயிருக்கிறாய்

ஹனிக்கா ஷெரின்



# ஒரு கட்டில் வாழ்க்கை

இந்த உலகத்துல நான் ஆசை பட்டது எதுவுமே நடந்ததே கிடையாது அதனாலே ஆசைப்படுறதே பாவம்னு இப்பவெல்லாம் தோணுது ..ஒண்ணு ரொம்ப ரொம்ப கஷ்டப் படுற ஏழையா இருக்கணும் இல்லை எப்பவுமே பண கஷ்டமே வராத பணக்காரனா இருக்கணும் ஆனா இந்த மிடில்கிளாஸ் வாழ்க்கைல மட்டும் வாழவே கூடாது ..ஏன்னா அது ஒரு நரகம் ..கௌரவம் கௌரவம்னு பேசி பேசி கீழயும் போகாது மேல போகணும்னு நினைச்சாலும் நம்மகிட்டே டப்பும் இருக்காது துப்பும் இருக்காது ...ஒரு ஏழைக்கு சீக்கு வந்தா எதை பற்றியுமே கவலை படாமே கவர்மெண்ட்

ஆஸ்ப்பிட்டல்ல போய் அட்மிட் ஆயிடுவான் ஆனா இந்த மிடில்கிளாஸ் காசு இல்லைன்னாலும் சொந்தக்காரன் பார்க்குறான் ,மயிறான் பார்க்குறான்னு கடனை உடனை வாங்கி தனியார் ஹாஸ்பிட்டலுக்கு போய் கடனாளி ஆகி தன் பிள்ளைகளுக்கு கடனை சொத்து போல சேர்த்து வச்சிட்டு செத்தும் போயிடுவானுங்க ....காசு இல்லாதவனுக்கு சுய கௌரவம் எதுக்குன்னு நினைக்குறவன் நான் ஆனா இந்த உலகம் அப்படி இல்லை காசு பணம் இல்லைன்னாலும் ஒரு லட்சம் செலவு பண்ணி தனியார் ஹாஸ்பிட்டல்ல பிரசவம் பார்கிறதாலே தான் ஊர் முழுதும் கோடி கோடியா கொள்ளை அடிக்க ஹாஸ்பிட்டல் கட்டி வச்சு இருக்கானுங்க ..ஹீலர் பாஸ்கர் மாதிரி உயிருக்கு ரிஸ்க் வைக்குற வீட்ல பிரசவம் முறையை உங்களை செய்ய சொல்லலை காசு இல்லாம எதுக்கு தனியார் ஹாஸ்பிட்டலுக்கு போகணும் ?கடனாளியா ஆகணும் ???

இங்கே கவர்மெண்ட் ஹாஸ்பிட்டல்ல ட்ரீட்மெண்ட் ஒழுங்கா இருந்தா நாங்க ஏண்டா அங்கே போக போறோம்னு நீங்க சொல்லுறது நல்லாவே காதுல கேட்குது ?? இங்க சிஸ்டம் சரியில்லைன்னு சொல்லுற எவனாலும் இப்ப இருக்கிற சிஸ்டத்தை மாத்த முடியாது ..நாம்ம மாறணும் ,நாம்ம மாறுன்னா இங்கே எல்லாமும் மாறும் ஆனா அதை நாம்ம என்னைக்கு புரிஞ்சிக்க போறோமோ ??

இந்த வீணா போன மூளை அடிக்கடி கண்டதை நினைச்சு வருத்தப் பட்டு கொண்டே இருக்கும் ..கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில நூறு பிரசவ கேசுல எப்படி தொண்ணூத்தி ஒன்பது கேசு நார்மல் டெலிவரி ஆவுது ,பிரைவேட் ஆஸ்பத்திரியில நூறு பிரசவ கேசுல ஒண்ணு மட்டும் தான் நார்மல் டெலிவரி மத்தது எல்லாம் காசுக்காக சிசேரியன்னு தோணுது ...என் பிரச்சனையே தலைக்கு மேலே இருக்கிறப்ப இந்த நாய் ஏண்டா ஊர் பிரச்சனையை பேசுதுன்னு நீங்க நினைக்கலாம் ஒரு ஏழு வருசத்துக்கு முன்னாடி என் தங்கச்சி பிரசவத்துக்கு அறுபதாயிரம் ,இந்த வருஷம் என் பொண்டாட்டி பிரசவத்துக்கு ஒரு லட்சம் கடனை உடனை வாங்கி கட்டும் போது தான் அதன் வலி புரியுது ...

என் பேரு சந்தோஷ் ,அந்த பேரு வச்சவனை தான் இதுநாள் வரைக்கும் தேடிக்கிட்டு இருக்கேன் , என் பேரை தவிர அந்த சந்தோசம் என் வாழ்க்கையில் ஏனோ இல்லை ...நான் அந்த வளைகுடா நாட்டு பாலை மண்ணை மிதிக்க கூடாதுன்னு எங்க அப்பா இங்கு வந்தார் ,இப்ப என் மவனாவது இந்த வளைகுடா நாட்டு பாலை மண்ணை மிதிக்க கூடாதுன்னு என் குடும்பத்துக்காக நான் வந்து இருக்கேன் ..

என் கதையை சொல்லுறதுக்கு முன்னாடி எங்க அப்பா கதையை கொஞ்சமா சொல்லலாம்னு இருக்கேன் ,அப்பா பெருசா படிக்கலை அந்த காலத்து நாலாம் கிளாஸ் அம்மா அஞ்சாம் கிளாஸ் ,எந்தளவுக்கு அப்பாக்கிட்ட நிறைய நல்லகுணங்கள் இருந்துச்சோ அந்தளவுக்கு ஏமாளியா இருந்தார் ,நல்ல உழைப்பாளி ஆனா சேமிக்க மாட்டார் ,நல்லா சாப்பிடணும் ,நல்ல துணி மணி உடுத்தணும்னு சொல்லுவார் ..அம்மாவ அடிக்கடி

படத்துக்கு கூட்டிச் செல்வார் ,அவருக்கு உலகமே அம்மா ,நான் ,தங்கச்சி தான் ..ஊர்ல சம்பாதிச்ச காசை சேர்த்து வைக்காததாலே கடனாளியா ஆனது தான் மிச்சம் ..இருந்த பரம்பரை வீடு ,கடை ஆகியவற்றை ஏமாளித்தனமா அவர் அண்ணனுக்கு எழுதி கொடுத்திட்டு அம்மா போட்டு வந்த நகையை வித்திட்டு தான் இந்த அமீரகத்துக்கு வந்தார் …அந்த வளைகுடாநாட்டின் நகர பகுதியை விட்டு ரொம்ப தூரமா உள்ள ஒரு ஷேக் பேலஸில் எங்க அப்பா பதினெட்டு வருஷம் சமையல் வேலை பார்த்தார். அப்பா கூட மிசிறி,பாகிஸ்தானி ,லெபனானி என்று கூட பதினாறு பேர் வேலை செய்தனர் ,அப்பா ஒரு ஆள் மட்டும் தான் தமிழன் கூட வேலை செய்பவர்களில் வேறு யாரும் தமிழர்கள் இல்லை இந்தியன் என்று பார்த்தால் கேரளா நாட்டை சேர்ந்த பைசல் என்ற ஒரு மலையாள பையன் ஒருவன் மட்டும் வேலை பார்த்தான் …ஒரு ரூமுக்கு நான்கு பேர் வீதம் நாலு ரூமுக்கு பதினாறு பேரும் வேலை நேரம் போக அவரவர் ரூம்களில் இருந்தனர் …அப்பா தங்கராஜ் அறையில் பைசல் மற்றும் ஒரு பாகிஸ்தானி ஒரு லெபனானி இருந்தனர் …

பைசல் எப்போதாவது பேசுவான் ,ரூமில் இருந்த மற்ற இரண்டு பேரும் ஊமை கோடாங்கி தான் …கிச்சனில் எப்போது வேலை இருக்கும் என்று சொல்ல முடியாது ,அரபி எப்போது பேலஸிற்கு வருகிறாரோ ,அவருக்கு என்ன தேவைப்படுகிறதோ ,அவர் கேட்கும் சமயத்தில் சமைத்து தரவேண்டும் …ஊரில் கிட்சன் பக்கமே போகாத அப்பா இந்த வளைகுடா மண்ணை மிதித்த பிறகு கிரில் சிக்கன் ,மஜ்பூஸ் (அரபி ஸ்டைல் புலாவ் ரைஸ் ),மஜ்பி ,டிக்கா ,கவாப்,சார்கோல் மட்டன் -சிக்கன் -பீப் டிஷ் என எல்லாமும் சமைக்க கற்றுக்கொண்டார் ..அப்பா வேலை செய்யும் இடத்தில் உள்ள அரபி (முதலாளி) காட்டு பூனையும் சாப்பிடுவாராம் ,ஒரு நாள் மட்டுமல்ல பலநாள் ஒரு சில தடவை (ஒரு ஐந்து தடவைக்கு மேல் இருக்கும் ) காட்டுப்பூனையை அறுக்கும் போது ஒரு சில காட்டுப்பூனைகள் அப்பாவின் கைகளை கடித்த பல வரலாறும் உண்டு ..

அப்போதெல்லாம் என்னையும் -தங்கச்சியையும் நினைத்து கொண்டே பல வலிகளை பொறுத்து கொண்டே அப்பா வேலை பார்த்தாராம் …இப்ப இருக்கிற மாதிரி எல்லாம் அப்பவெல்லாம் இன்டர்நெட் கூட கிடையாதாம் , வேலை நேரம் போக மீதி நேரத்தில் அங்குள்ள தோட்டத்தில் வெறுமையாய் ஊர் நினைவுகளை அசைபோட்டு உட்கார்ந்திருப்பாராம் ..அவருக்கு ஒரே ஆறுதல் அம்மாவின் கடிதமும் ,எப்போதாவது ஊரிலிருந்து யாராவது வந்தால் அம்மா பேசி அனுப்பி விடும் கேசட் மட்டும் தானாம் …ஒரு நாளைக்கு குறைந்தது பன்னிரண்டு மணிக்கு மேல் வேலை இருக்குமாம் ..எத்தனை துன்பம் வந்த போதும் எங்களுக்காக அப்பா எல்லாவற்றையும் பொறுத்து கொண்டு போராடினார் ..அம்மா பேசி அனுப்பும் கேசட்டை கேட்டு கேட்டு ரீல் அறுந்து போய் வேறொரு கேசட் அனுப்பும் படியும் எத்தனையோ முறை சொல்லி இருக்கிறார் ..அதையெல்லாம் இப்போது நினைத்து பார்க்கும் போது அப்பா அம்மா

மீது எந்தளவுக்கு காதல் வைத்திருந்தார் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது ..

இப்போது இருக்கிற மாதிரியெல்லாம் அப்போது லேபர் ரூல்ஸ் ரெகுலேஷன் எல்லாம் அந்த நாட்டின் நடைமுறையில் அப்போது இல்லை . மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ரெண்டு மாதம் அப்பாவுக்கு விடுமுறை தருவார்கள்,அப்பா மூன்று ஒரு வருடங்களுக்கு ஒரு முறை ஊருக்கு வரும் போது தான் அவரது முகத்தில் புன்னகையை பார்க்க முடியும் ,திரும்ப வெளிநாடு செல்லும் போது சின்னக்குழந்தை மாதிரி அழுது கொண்டே தான் செல்வார் ..ஊர் செல்லும் போது அவரது பெட்டியில் அம்மாவின் சேலை ,புகைப்படம்,அம்மா பேசிய நான்கு ,ஐந்து கேசட்டுகள் எடுத்து செல்வார் இதுதான் அங்கு அவருக்கு ஆறுதலாய் இருந்திருக்கிறது..ஒவ்வொரு முறையும் வரும் போது இதுதான் கடைசி பயணம் அடுத்த முறை போக மாட்டேன் என்பார் ஆனால் என் படிப்பு ,குடும்ப தேவை ,பெரியவள் ஆகும் போது தங்கையின் திருமணத்திற்கு நகை,பணம் சேர்க்க என அவரது இருபது வருட வாழ்க்கை அந்த அயல்நாட்டு தனிமை நரகத்திலேயே முடிந்து விட்டது ..நான் படித்து முடித்து ஊரில் ரெண்டு வருடம் வேலை பார்த்து அதன் பின் பெற்ற அனுபவத்தை அடைந்த பின் என்னை அந்த வளைகுடா நாட்டின் ஒரு வேலையில் சேர்த்து விட்டு ஊரில் நிம்மதியாக வாழலாம் என்று இருந்த வேலைக்கு முழுக்கு போட்டு விட்டு தன்னுடைய நாற்பத்தி எட்டாம் வயதில் அப்பா ஊருக்கு சென்றார் ..போன ஆறு மாதத்தில் தான் இதுவரை சேமித்த பணம் -நகையை கொண்டு தங்கச்சிக்கு நல்லபடியாக திருமணம் முடித்து விட்டு இருந்த கொஞ்ச பணத்தில் கொஞ்சம் கடனை வாங்கி இருந்த கொஞ்ச இடத்தில அஸ்திவாரத்தை போட்டார் அப்பா ...

டே சந்தோஷ் எப்படியாவது சொந்த வீட்டுக்கு குடி போயிடணும்டா என அடிக்கடி சொல்வார் ,அம்மாவுக்கும் -அப்பாவுக்கும் கல்யாணமாகி இத்தனை வருஷத்தில் எதுக்கும் ஆசைப்பட்டதில்லை ..அவங்க ஆசைப்பட்டது தங்கச்சிக்கு நல்லபடியா கல்யாணம் பண்ணி வைக்கணும் ,ரெண்டாவது குடி தூக்கின்னு கிண்டல் பண்ணும் சொந்தக்காரன் முன்னாடி சொந்த வீட்டை கட்டி ,குடி போய் அதுக்கப்புறம் எனக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு தான் எங்க அப்பா ,அம்மாவோட ஆசை. தங்கச்சிக்கு நல்லபடியா கல்யாணம் முடிஞ்சிடுச்சு ,அஸ்திவாரம் கூட போட்டாச்சு இருக்கிற கடனை அடைச்சிட்டு,வீட்டை கட்டிட்டு வந்திடணும்னு நினைச்சேன் ..கடன் ,தங்கச்சி பிரசவ செலவு ,வீடு கட்டும் பணி என என் ஐந்து வருட வாழ்க்கையின் சம்பளம் அதுக்கே சரியாய் இருந்தது ...

வீடு கிரகப்பிரவேசத்துக்கு ஒரு பத்து நாளைக்கு முன்னாடி அப்பாவுக்கு இதயத்தில் பிரச்சனை ஏற்பட்டு ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் சேர்த்து ,போதிய பணம் இல்லாமல் வட்டி கடையில் வீட்டு பத்திரத்தை அடமானம் வைத்து எட்டு லட்சம் ரூபாய் செலவு செய்தும் கூட அப்பாவை காப்பாற்ற முடிய வில்லை ...புது வீட்டில் சந்தோசமாய்

குடியேற வேண்டியவர்கள் ஏனோ அப்பாவின் கடைசி ஆசையை நிறைவேற்றுவதற்காக அவரது பிணத்தை அந்த வீட்டில் ஒரு நாள் முழுதும் வைத்து அதன் பின் அடக்கம் செய்தோம் ...

எதுக்காக நானும் -அப்பாவும் கஷ்டப்பட்டமோ அந்த வீடே இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டதால் வேறு வழியின்றி அந்த வளைகுடா நரகத்தில் வேறு வழியின்றி அப்பாவை போல நானும் பல வருடம் இருக்க வேண்டிய சூழ்நிலை ..கடனை எல்லாம் அடைத்த பிறகு ,அந்த வீட்டை மீட்ட போது எனக்கு வயது முப்பத்தி நான்கு ,மீண்டும் குடும்ப கவுரவம் மயிறு ,மட்டைனு சொல்லிட்டு என்னை ஆறு லட்சத்துக்கு கடனை வாங்க வச்சு கல்யாணம் என்கிற பெயரில் மீண்டும் கடன் சுமையை என் மீது இறக்கி வைத்தார்கள் ..

பானை நல்லா வர்றது மண்ணுக்கிட்ட இல்லை ,மண்ணை பிடிக்கிறவன்கிட்ட இருக்குன்னு ஊர்ல ஒரு பழமொழி சொல்வாங்க ஆனா என் பொண்டாட்டி பரிமளா அழகுல குறை சொல்ல முடியலைன்னாலும் குணத்துல தகரமா இருந்தா ,ஏழை வீட்டு பெண்ணை கட்டுனா கஷ்டத்தை உணர்ந்து குடும்ப பொறுப்போட இருப்பான்னு நானும் ,அம்மாவும் நம்பினது எவ்வளவு பெரிய முட்டாள் தனம் என்பது எங்களுக்கு அதுக்கப்புறம் தான் தெரிஞ்சது ..அவ ஏழைன்னு அவ குடும்பத்துக்கு ஒரு ரூபாய் கூட செலவு வைக்காம கல்யாண செலவுகள் எல்லாத்தையும் நானே என் தலைமேல போட்டுக்கிட்டேன் ,ஆனா என் பெருந்தன்மையை புரிஞ்சுக்காம தேவையில்லாத செலவுகளிலெல்லாம் என்னை இழுத்து விட்டாள்..அவள் விருப்பத்திற்கு மாறாக நடந்து கொண்டால் என்னை டார்ச்சர் செய்தாவது அவள் நினைத்த காரியத்தை முடிக்காமல் விடமாட்டாள் ..ஒட்டு மொத்த திமிரையும் மொத்தமாக குத்தகைக்கு வாங்கியவள் போல் நடந்து கொண்டாள்..வீட்டு வேலை எப்போதாவது சொன்னால் மட்டுமே செய்வாள் ,பொறுப்பாகவெல்லாம் செய்ய மாட்டாள் ..ஏதாவது கேட்டோம் என்றால் வீட்டுக்கு வேலை ஆள் வை என்பாள் ..என் வீட்டில் எங்க அம்மா தான் வேலை பார்ப்பாங்க ,நானெல்லாம் வேலை செய்ய மாட்டேன் ,விருப்பமிருந்தா வேலை ஆள் வை ,இல்லைன்னா உங்க அம்மாவை வேலை பார்க்க சொல் என்று விதண்டாவாதம் செய்வாள் ..கல்யாணம் என்பது ஆயிரம் காலத்து பயிர் ..சண்டை போட்டு கொண்டு அடித்து கொள்ளவோ ,விவாகரத்து வாங்கவோ விரும்ப வில்லை . இல்லறம் என்பது ஒருத்தருக்கு ஒருத்தர் புரிஞ்சுக்கிட்டு வாழுறது ...எத்தனையோ விஷயங்களில் நான் இறங்கி போவேன் விட்டு கொடுப்பேன் ஆனால் அவள் ஒரு நாள் கூட அது போலெல்லாம் செய்ததே கிடையாது ..அவளை பொறுத்த வரை புருஷன் எந்த கஷ்டத்தில் இருந்தாலும் அவளுக்கு பிடிச்சதை சாப்பிடணும் ,அவளுக்கு பிடிச்ச இடத்துக்கு ஸ்கூட்டர்ல கூட்டிட்டு போகணும் ,நினைச்ச மாதிரி செலவு செய்யணும் ,நாளைக்கு சேமிக்காம ,வருங்காலத்தை பற்றி நினைச்சு பார்க்காம தன் இஷ்டம் போல

ஜாலியா இருக்கணும் ..வீட்டு வேலை ஒழுங்கா செய்றாலோ இல்லையோ பொழுது முழுவதும் தன் தோழிகளுக்கு ,உறவினர்களுக்கு மெசேஜ் அனுப்புவது ,போன் பேசுவது என்று இருந்தாள்...

கல்யாணமாகி ஒரு இருபத்தி மூன்று நாள் தான் அவளோடு வாழ்ந்தேன் ,அதன் பின் மீண்டும் பொருளாதாரம் வேண்டி அந்த வளைகுடாநாட்டுக்கு வந்தேன் ..வரும் போது அவள் செலவுக்கு பணமும்,குடும்ப செலவுக்காக அம்மாவுக்கு பணமும் கொடுத்து விட்டு வந்தேன் ..அம்மா சிக்கனக்காரி , பொறுப்பாக குடும்பத்தை பார்த்து கொள்வாள்,ஆனால் மனைவி செலவாளி எவ்வளவு பணம் கொடுத்தாலும் செலவு பண்ணிட்டு செலவுக்கு சரியாவே பணம் அனுப்ப மாட்டாருன்னு குறை சொல்வா ,வாழ்க்கை தனிமையில வேலை டென்ஷனோட போய்க்கிட்டு இருந்துச்சு ,ஒரு மாசத்துக்கு அப்புறம் அவ கன்சீவ் ஆன செய்தி கேட்டு ரொம்பவும் சந்தோசப் பட்டேன்..அதுக்கப்புறம் அவ போன்ல பேசும் போது எவ்வளவு கோபம் பட்டாலும் பிறக்க போகும் குழந்தைக்காக எல்லாத்தையும் பொறுத்து கொண்டேன் ...வாழ்க்கை அயல்நாட்டு நரகத்தில் இருந்தாலும் பிறக்க போகும் குழந்தையை எண்ணி -எண்ணி தினம் தினம் சந்தோசப்பட்டுக்கொண்டேன் ..என் வாழ்க்கைல ரொம்ப சந்தோஷப்பட்டா அந்த ஆண்டவனுக்கு கூட பிடிக்காது என்பதை முதன் முதலாய் புரிந்து கொண்டேன் ...குடும்ப பொறுப்புக்காக கைவிட பட்ட காதல் ,பிடித்தவர்களின் பிரிவு ,அப்பாவின் மரணம் என என் வாழ்க்கையில் எத்தனையோ இழப்புகள் ,தோல்விகள் என சந்தித்து இருந்தாலும் ,அப்பாவின் மரணத்திற்கு பிறகு என்னை ரொம்பவும் மீண்டும் உருக்குலைய வைத்தது இதுவரை இந்த பூமியை பார்க்காத என் குழந்தையின் மரணம் தான் ..

ஆம் என் மனைவி எட்டு மாதம் நிறைமாத கர்ப்பமாக இருந்த காலத்தில் அவள் காலேஜில் பட்டமளிப்பு விழா நடைபெற்ற போது அதற்க்கு செல்ல வேண்டும் என அடம்பிடித்தாள்.

இங்க பாரும்மா நீ மேல்படிப்பு படி என சொன்னவன் நான் ,ஆனா நீ தான் இதுக்கு மேலே படிக்க விரும்பலைன்னு சொன்னே ,நீ பட்டம் வாங்குறது எனக்கு சந்தோசம் தான் ஆனா நீ நிறைமாசமா இருக்குற இந்த நிலைமையில வேணாம்டி ,ஏன்னா உன் கல்லூரியில இரவுல தான் பட்டமளிப்பு விழா நடத்துவானுங்க ,அதுவும் ரோடு வேற சரியில்லை வேணாம்டி என்று எவ்வளவோ கெஞ்சியும் கூட என் வார்த்தையை அவள் கேட்பதாய் இல்லை ,வேறுவழியின்றி நிறைமாத கர்ப்பிணி என்பதால் சரி போயிட்டு வா ஆனா பார்த்து பத்திரமா போயிட்டு வா ,உன் நண்பர்களை கண்டதும் நீ பழைய மாதிரி ஆட்டம் போடாதே என்று தொலைபேசியில் அறிவுரை கூறினேன் ....

பட்டமளிப்பு விழா நடைபெற்ற தினம் மனசும் -உடம்பும் எனக்கு பட படவென இருந்தது ,ஏன் என்றே தெரியவில்லை ,அவளுக்கு போன் செய்தும் அவள் போன்

எடுப்பதாய் இல்லை ..அன்று இரவு முழுவதும் உறக்கமே வரவில்லை ..

மறுநாள் காலை போன் செய்தும் அவள் போனை எடுப்பதாய் தெரியவில்லை ..அன்று முழுவதும் பல அழைப்புகள் விடுத்தும் அவள் எடுப்பதாய் தெரியவில்லை அதற்க்கு மறுநாள் அவள் அம்மாவிடமிருந்து போன் ,என் மனைவியை மருத்துவமனையில் சேர்த்து இருப்பதாகவும் ,என் மனைவிக்கு வயிற்றுவலி ஏற்பட்டதாகவும் அதனால் ஸ்கேன் செய்து பார்த்ததில் வயிற்றில் இருந்த குழந்தையின் மண்டையில் இருந்து மூளை வெளிவந்து இறந்ததாகவும் உடனே வயிற்றில் உள்ள இறந்த குழந்தையை ஆப்ரேசன் செய்து வெளியே எடுக்க வேண்டுமென்றும் சொல்லினர்

இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவளை கேள்வி கேட்டு வார்த்தையால் கொலை செய்ய விரும்பவில்லை ,என் மாமியாரிடம் மட்டும் அவள் உயிருக்கு ஆபத்து ஏற்படா வண்ணம் என்ன செய்யணுமோ அதை செய்யுங்க என்றேன் ..ஆனால் அம்மா மட்டும் வீட்டின் முதல் வாரிசு இப்படி போயிடிச்சே என்று வானுக்கும் -மண்ணுக்கும் குதித்தாள்...

சில மாதங்களுக்கு பிறகு ...

வேலைசெய்யும் கம்பெனியிடம் மன்றாடி லீவு பெற்று கொண்டு ஊர் சென்றேன் ..மருத்துவர் இப்போதைக்கு குழந்தை வேண்டாம் என்றனர் ஆனால் ஊருக்காகவும் -அம்மாவுக்காகவும் வேண்டி என்னை எவ்வளவு டார்ச்சர் செய்யணுமோ டார்ச்சர் செய்து ,டாக்டரிடம் அழைத்து சென்றாள் ஏனென்றால் தற்பொழுது அவள் கருத்தரித்தால் மீண்டும் பிரச்சனை வரும் ,சில வருடங்கள் போகட்டும் நார்மலாகவே உங்களுக்கு குழந்தை பிறக்கும் என்றனர் ஆனால் அவள் எதையும் காது கொடுத்து கேட்பதாய் தெரியவில்லை ... பல பொருளாதார சிக்கலில் தவிக்கும் என்னை இப்ப இருக்கும் நவீன மருத்துவமுறைகள் மூலம் உடனடியாக ஒரு சில லட்சங்களை செலவு செய்ய வைத்து அவள் கர்ப்பம் தறித்தாள்..அப்ப கூட டாக்டர் எச்சரித்தார் உன் உடல் நிலை கருவை தாங்க கூடிய அளவுக்கு பலமுடையதாய் இல்லை அதனால் கொஞ்சம் கவனமாக இருக்கணும் என்றனர் ...என்னை மாதிரி மாச சம்பளத்தை நம்பி வாழும் மிடில்கிளாஸுக்கு லட்சம் ரூபாய் எல்லாம் பெரியவிஷயம் ...மாசத்துக்கு ரெண்டு தடவை அவள் ஆஸ்ப்பிட்டல் அட்மிட் ஆயிடுவா ,அவ ஹாஸ்ப்பிட்டல் அட்மிட் ஆகும் ஒவ்வொரு வினாடியும் மரண கிணறை தாண்டுவது போலயே இருக்கும் ..ஆறு மாசத்துக்கு அப்புறம் கரு உறுதியா இருக்கும் ,கவலை பட வேணாம்னு சொல்வாங்க ஏற்கனவே இவ எட்டு மாசத்துல அஜாக்கிரதையா இருந்ததாலே ஒரு குழந்தையை பறிகொடுத்தோம் இன்னொரு தடவைன்னா மனசு தாங்காது நல்லதை என்னைக்குமே சாப்பிட மாட்டா ,பாதாம்,பிஸ்தா ,மாதுளை பழம் ,ஆப்பிள் ,கீரை ,ஜூஸ்ன்னு எது கொடுத்தாலும் சாப்பிட மாட்டா ,பாணி பூரி ,காரமான பேக்கரி அயிட்டங்கள் என்று வெளுத்து காட்டுவாள் ,முறையில்லாத உணவு பழக்கத்தாலும் பலமுறை தேவையே

இல்லாமல் ஆஸ்ப்பிட்டல் சென்று எனக்கு பல செலவுகளை இழுத்து விட்டாள்..இந்த முறையும் இவள் செய்த அலட்சியத்தால் எனக்கு பிறந்த குழந்தை குறை மாதத்தில் ஒரு கால் வளைந்து ,எடை குறைந்து பிறந்தது ...சரியில்லாத உணவு பழக்கத்தால் என் மனைவிக்கு தாய்ப்பாலும் வராமல் போனது ..யார் செய்த பாவமோ என் குழந்தை ஒரு சில நாட்கள் மருத்துவ பராமரிப்பில் வைக்கப்பட்டு கொஞ்சம் உடல் நலம் தேறியது.. எடைகுறைந்த என் குழந்தை தினம் தினம் புட்டியில் பவுடர் பாலை உறிஞ்சி குடிக்கும் போது என்னையும் அறியாமல் கண் கலங்கும் ..என் குழந்தையின் கால் சரியாக இப்போதிலிருந்தே கட்டு போட வேண்டும் என்று டாக்டர் உறுதியாக சொல்லி விட்டார்.

எலும்பு பிஞ்சா இருக்கும் போதே சரி பண்ணணும்ப்பா ,பெருசா எலும்பு வலுவடைந்ததுக்கு அப்புறம் கட்டு போட்டா ஒரு பயனும் இல்லை ,அது நேராகவும் வாய்ப்பில்லைனு சொல்லிட்டாங்க , இப்பவே ஒரு வாரம் இடைவெளிவிட்டு ,விட்டு ஒரு ரெண்டு மூணு தடவை மாவு கட்டு போட்டா போதும் அதுக்கப்புறம் எல்லாம் சரியாயிடும்னு சொன்னாங்க வேறு வழியின்றி நானும் சம்மதித்தேன் ..ஒரு ரெண்டு மூணு தடவை கட்டுன்னு சொல்லிட்டு ஒரு பத்து தடவைக்கு மேலாவது கட்டு போட்டிருப்பான் அந்த டாக்டர் ...ஒவ்வொரு தடவையும் கட்டு பிரிக்கும் போது என் குழந்தை கதறும் கதறலை கேட்கும் போது என் இதயம் வெடித்து விடும் போல இருந்தது ....ஊரிலேயே இருந்து விட எண்ணம் தான் ,என் குழந்தையின் காலை எப்படியோ சரி செய்து விட்டேன் ,ஆனால் ஊரிலேயே இருந்தால் குடும்பத்தை யார் காப்பற்றுவது,பொருளாதாரத்துக்கு என்ன பண்ணுவது என்று யோசித்து விட்டு மீண்டும் பழைய படி அந்த அயல்நாட்டு நரகத்துக்குகே வந்தேன் ....

சில வருடங்களுக்கு பிறகு ...

இப்ப போகலாம் ,அப்ப போகலாம்னு வருசமும் ,வயசும் தான் ஓடி போச்சு ..முன்னே மாதிரி மனசும் சரியில்லை ,உடம்பும் ஒத்துழைக்க மாட்டேங்குது ...தங்கச்சி கல்யாணக்கடன் ,வீட்டுக்கடன் ,அப்பா மருத்துவச்செலவு , என்னுடைய கல்யாண கடன் ,என் குழந்தை பிரசவ செலவு ,மருத்துவ செலவு ,குழந்தை படிப்பு என்று வாழ்க்கையில சம்பளம் உயருதோ இல்லையோ ஆனால் தேவைகளும் - பொறுப்புகளும் மட்டும் அதிகமாயிக்கிட்டே இருக்கு ..இந்த பாலைவன மண்ணில் பணத்தை சேர்த்தவனை விட ,தண்ணீரை தன் திமிலில் அளவுக்கு அதிகமாய் சேர்த்து வைத்திருக்கும் ஒட்டகம் போல ,நிறைய மனிதர்கள் நினைவுகளை சேர்த்து வைத்து இருக்கின்றனர் ...

நான் இந்த மண்ணுக்கு வர கூடாதுன்னு நினைச்ச அப்பா மாதிரி நான் பீல் பண்ண தேவையில்லை ஏன்னா எனக்கு பையன் இல்லை ஒரே ஒரு பொண்ணு மட்டும் தான் , இப்போதைக்கு என் வாழ்க்கையில் உள்ள ஒரே ஒரு லட்சியம் நல்ல குணமுள்ள

,அழகான ,நல்ல வேலையில் உள்ள ஒரு பையனுக்கு என் பொண்ணை நல்ல படியா கல்யாணம் பண்ணி கொடுத்தா போதும், அதுவரைக்கும் இந்த உடம்புல இந்த உசுரை வச்சிரு ஆண்டவா என்று வேண்டி கொண்டேன் ..

வயசு இருக்கும் போது என் பொண்டாட்டிக்கிட்ட எத்தனையோ முறை ஊர் வந்திடுறேன்மா என்று சொல்லி இருக்கேன் ஆனா நீங்க ஊர் வந்திடுங்க நீங்க ஏதாவது தொழில் செஞ்சு காப்பாத்துவீங்கன்னு எனக்கு நம்பிக்கை இருக்குன்னு ஒரு நாள் கூட ஒரு வார்த்தை கூட சொன்னதே இல்லை ..இப்ப ஊருக்கு வந்தா என்ன பண்ணுவீங்க ??ஊருக்கு வர்றவங்களுக்கு எதுக்கு கல்யாணம் ..இதுக்கா எங்க அப்பா அம்மா கல்யாணம் பண்ணி கொடுத்தாங்க என்று அவள் கொடுக்கும் லெக்ச்சரில் ஊர் போகும் எண்ணமே வராது..ஆனால் விடுமுறைக்கு ஊர் போகும் அந்த ஒரு மாதம் மட்டும் அன்பாக இருப்பாள் ,ஊரிலேயே வேலை பார்க்கிறேன் என்று சொன்னால் அந்த அன்பும் கிடைக்காது என்பதால் வாயில்லா புள்ள பூச்சியாகவே இருந்து விட்டு போவேன் ...கல்யாணம் ஆச்சு ,குழந்தையும் பிறந்தாச்சு ,என்னையே குணத்திலும் ,உருவத்திலும் உரித்து வைத்திருக்கும் மகளின் முகம் கண்டு அனலாய் எரிந்து கொண்டிருக்கும் சோகமெல்லாம் சந்தோசமாய் மாறும் ...

எப்படியாவது இவளை நல்ல இடத்துல கரை சேர்த்திடணும் என்கிற ஒரு எண்ணம் மட்டுமே இப்போதைக்கு இருந்துச்சு ..சின்ன வயசா இருக்கும் போது சீக்கிரமா படிச்சு முடிக்கணும் ,சீக்கிரமா வேலைக்கு போகணும் ,சீக்கிரமா கல்யாணம் பண்ணனும் ,சீக்கிரமா குழந்தை பெத்துக்கிடணும்னு தோணுச்சு ஆனா வயசான பிறகு, அறிவு வந்த பிறகு சின்ன புள்ளயாகவே இருந்திருந்தா வாழ்க்கை நல்லா இருந்திருக்குமோன்னு இப்ப தோணுது.

அப்பப்ப இறந்து போன அப்பாவின் ,அம்மாவின் ஞாபகங்கள் வந்து போகும் ..ஏதாவது ஒரு விஷயம் அப்பாவின் நினைவுகளை அப்பப்ப தட்டி விட்டு மனதை கிளறி விட்டு செல்லும் ..ஒரு நாள் ஏசியா நெட்டில் மம்முட்டி நடித்த பத்தே மாறி படம் ஓடி கொண்டிருந்தது மம்மூட்டி இறக்கும் காட்சியில் நான் தொலைக்காட்சியில் கண்டது மம்மூட்டியை அல்ல என் அப்பாவை தான் ...சொந்த வீட்டில் வாழ வேண்டும் என்று ஆசைப்பட்ட அப்பா, அரைகுறையாக கட்டிமுடிக்க பட்ட வீட்டில் பிணத்தை வைத்து அடக்கம் செய்த காட்சியில் என்னையும் அறியாமல் கண்களில் கண்ணீர் தாரை,தரையாக வழிந்தது .யாரோ என் வாழ்க்கை கதையை திருடி படம் எடுத்ததாக உணர்ந்தேன் ..அந்த படம் பார்த்த சில நாட்களுக்கு பிறகு அழுது ,அழுது உடல் நிலை மோசமானது மிச்சம் ..ரூம்மெண்ட் கூட திட்டினார்கள் ஏண்டா சந்தோஷ் ,நீ ஏற்கனவே கவலையில இருக்கிறவன் ,நல்லா ஜாலியா உள்ள படத்தை பார்க்கிறதை விட்டிட்டு சோகப்படத்தை பார்த்திட்டு உடம்பை கெடுத்துக்கிறியே ,உன் உடம்பு இருக்கிற கண்டிஷனுக்கு நீ ஊருக்கு போறது தான் நல்லது என்று சொன்னார்கள் ..ஆமாம் எந்த கெட்டபழக்கமும்

இல்லாமல் இந்த ஊர் உணவால் வயிற்றில் அல்சர் ,மூலம் வந்தது தான் மிச்சம் ..இரண்டு முறை இந்த ஊர் ஆஸ்ப்பிட்டலில் ஆப்ரேஷன் செய்தும் மலம் கழிக்கும் போது இரத்தம் நின்றபாடில்லை ஏனென்றால் இந்த ஊர் வெயிலும் ,பார்க்கும் வேலையும் அப்படி ...என்ன செய்ய ??

எனக்கு மட்டும் ஊர் போக ஆசையில்லையா என்ன ?? யார் கூப்பிடுவா ??

இந்த ஊரை விட்டு போறதுக்கு முன்னாடி என் செல்லத்துக்கு நல்லபடியா கல்யாணம் செஞ்சு வச்சிட்டு கண்ணை மூடிடனும் ...

டே ....சஜ்ஜு ..என் போன் ரிப்பேர் ஆயிடிச்சு ,அதனாலே அலாரம் வைக்க இயலலை ,நாளை ராவுல அஞ்சு மணிக்கு நீ ஜோலிக்கு போகும் போது என்னை விளி என்று என் மலையாள நண்பனிடம் சொல்லி விட்டு உறங்கச் சென்றேன் ...

விடிகாலை அஞ்சு மணி ...

டே ..சந்தோஷ் ஜோலிக்கு போகணும்னு என்னை விளிக்கச் பறைஞ்சலே ,கெட் அப் மேன்

அப்போது அவன் சப்தமாய் சத்தமிட்டும் சந்தோஷிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை ...

அப்போது சஜ்ஜு பயந்து போய் சந்தோஷின் நெஞ்சில் காது வைத்து கேட்கிறான் இந்த நொடி வரை பல கனவுகளோடும், பொறுப்புகளோடும் உறங்காமல் இருந்த சந்தோஷின் இதயம் துடிப்பில்லாமல் அந்த கட்டிலில் உறங்கி கொண்டிருந்தது..

**ச . இிராஜ்குமார்**

■

இந்த நிமிடம்
இந்த
நொடி நீ
என்ன செய்துகொண்டிருக்கிறாய்
என்ற நினைப்பே
காதல் தான் .....!!!!!

■

பிரிவு என்பது அதுவாகவே
நிகழ வேண்டும்.
புறக்கணிப்பெல்லாம்
கொலைக்கு சமானம்..

**கௌந்தி மு**
**சென்னை.**

# அவர் உருவம்

என்றோ
சிரித்ததை வைத்துக்கொண்டு
இன்றும்
அச்சிலேற்றிக்கொண்டிருக்கிறார்கள்
காந்தியின் புகைப்படத்தை
இன்றிருந்தால்
அழுதபடியே தான்
இருந்திருக்கும் அவருருவம்
என்பதை அறியாமல்....

# நீ, நான், நினைவுகள்

திங்கள். ம.இல.நடராசன்

■

உன் நினைவுகள் சடலம்;
நான் என்பது சவக்குழி
என்றானபின்,
சுமப்பதைத் தவிர
வேறு வழியில்லை.

■

வசந்தகாலம் களித்து
கூடடைய பறக்க
எத்தனித்துவிட்ட
தூர தேசப் பறவை நீ.
வசந்தகாலம் நோக்கி
சருகென உதிரும்
வனம் நான்.

■

முன்னர் போல்
பேருந்து அல்லது இரயில்
பயணச்சீட்டுகளை எல்லாம்
சேமித்து வைக்காமல்,
பயணம் முடிந்த
மறுகணமே
கிழித்து விடுகிறேன்.
ஏனெனில்,
அவற்றின் இருப்பு
எப்போதுமே
என் வாழ்க்கையின்
உன் இருப்பினை
மண்டைக்குள்
இசைகின்றன.

■

என்னை உன் வாழ்க்கையில்
இருந்து தூக்கி எறிவதில்
நீ எவ்வளவு பிடிவாதமாக
இருக்கிறாயோ,
அதைவிட ஒருபடி மேலே
சென்று,
உன் நினைவுகளை
என் வாழ்க்கையில் இருந்து
விலகிச் செல்லவிடாது
கடைசிவரை பிடித்துக்கொண்டு
இருப்பேன்.

■

என் வாழ்நாளின்
ஏதோ ஒரு நொடியில்
நீ மறக்கப்படுவாய்;
அந்த நொடிக்காக
காத்திருப்பதைத் தவிர
வேறொன்றும் இல்லை.

■

வாழ்வு முழுமைக்குமான
ப்ரியம் அனைத்தையும்
சிறுதுளி கூட
மிச்சம் வைக்காமல்
உன்னிடம்
கொடுத்து விட்டேன்.
நீ உனதன்பை
உன் காதலனிடம்
சேர்க்கும்போது
மறக்காமல் எனதன்பையும்
சேர்த்துக் கொடுத்துவிடு.
நிறைதலும் குறைதலுமாய் ...

பூ.விவேக், திருப்பூர்

# அம்மாவின் விடியல்!

■

*குழந்தை உறங்குகையில்*
*கருவறையாகிறது*
*அப்பாவின் தோள்கள்!*

■

*முத்தத்தின்*
*எடையை வைத்தே*
*பாசத்தை அளக்கிறாள்*
*மனைவி!*

■


*தூங்கும்போது கண்கள்*
*போர்வை கேட்கிறது!*
*கனவுகள் உன்னை கேட்கிறது!*

■


*மனைவி சமைத்த*
*மதிய உணவில்*
*முத்தத்தின் ருசி!*

■

*நீ*
*இல்லாத இரவுகளில்*
*உன் தலையணையெங்கும்*
*பதிந்து கிடக்கின்றன*
*என் உதடுகள்!*



வாசகன் வெங்கடேசன்



# வானவெளியில் ஒரு வீடு

வானத்தின் வண்ணக்கயிற்றொன்றில்
தொங்கவிடப்பட்டுள்ளது என் வீடு
எல்லா கதவுகளும் திறந்தபடியே
கிடக்கிறது
காற்றுவாசிகளை உள்ளுக்குள் இழுத்தபடி
ஜன்னலும் மூடாத நிலையில்
பெருஞ்சத்தங்கள் காதைப் பிளக்கிறது
வாசலில் வருக வருக வாழ்த்து தருக
என்றவாறு ஒரு பலகையில்
அன்பு வரையப்பட்டுள்ளது
வீட்டிற்குள் உபசரிப்புகள் பன்னீர் தெளித்தபடி
காத்திருந்தன
விருந்தினர்கள் வரும் வரை
சித்திரம் வரையும் பணியில் ஈடுபட்டிருந்தது
மனவீட்டின் தூரிகைகள்
அடடே வந்துவிட்டீர்களா
முகமலர்ந்து வரவேற்றபோது
முன்னடந்து வந்த கவிதா தேவி
உள்புகுந்து கதவையும் ஜன்னலையும்
சாத்திக்கொண்டாள்
என்னை அரவணைத்தபடி..

முனைவர் த.ராதிகா லட்சுமி,
பொள்ளாச்சி



# சங்க இலக்கியங்களில் சான்றாண்மை

தனிமனிதனின் சுயஒழுங்கு கட்டுப்பாடே அறத்திற்கு வித்தாக அமைகின்றது. சுயஒழுங்கு ,கட்டுப்பாடு,அறம், நாகரிகம் போன்றவை ஒன்றையொன்றுச் சார்ந்தவை. அறம் என்பது தனிப்பட்ட மனிதனுக்காக உருவாக்கப்பட்டதல்ல. இரண்டுக்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே சமூக உறவுகள் நிலவும்வேளையில் அறம் தோற்றம் பெறுகின்றது. அறங்கள் சமூக ஒழுங்கை அல்லது நடப்பில் நிகழ்கின்ற ஆதிக்க அடிமை உறவுகளை வெளிப்படுத்துகின்றன எனலாம். தனிமனித அறம், ஈகை, நட்பறம், துறவறம், வணிக அறம் போன்ற அறங்களில் சமூகத்துடன் தொடர்புடைய சான்றாண்மை அறம் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**சான்றாண்மை :**

'சால்பு ( Good) என்னும் பொருளைத் தருகின்ற உலகமொழிகளின் சொற்களின்

மூலப்பொருள் சான்றோர், சான்றாண்மை ( noble,aristocrat) என்றும், இதற்கு எதிர் மறையான புன்மை ( evil,bad) எனும் சொல் பல மொழிகளில் புலைமை, புலையன் ( low,plebean) என்ற மூலப்பொருளையும் குறிப்பிட்டது.'

(ராஜ்கௌதமன் - தமிழ்ச்சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப.எ: 255)

என்னும் நீட்சேவின் கருத்து குறிப்பிடத்தக்கது. இலத்தீன் மொழியில் சால்பு என்ற சொல் போர்வீரர்கள் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. சான்றாண்மை என்றால் 'சால்பு'. தன்னை ஆளுதல் என்று பொருள் சான்றாண்மை என்பது இனக்குழுச் சமூகத்தில் வேட்டை- பாதீடு என்றும் வீரயுகத்தில் வீரம், மறம் என்றும் மன்னராட்சியில் உயர்ந்தோரின் அறம் என்றும் மாற்றமடைந்துள்ளது. சான்றாண்மை சமூகத்தில் உயர்ந்த விழுமியமாக போற்றப்பட்டது.

**சங்க இலக்கியங்களில் சான்றாண்மை :**

சங்க இலக்கியங்களில் சான்றான் என்றால் வீரன், அறங்கள் மிக்கவன் என்ற இருபொருளில் கையாளப்பட்டுள்ளது. உயர்ந்த அறங்களைக் கொண்டவன் என்ற பொருளிலேயே அதிகம் சான்றோன் என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது. பொருள்வயின் பிரிய முற்படும் தலைவனிடம் தோழி பெரியோரின் ஒழுக்கம் குறித்து எடுத்துரைப்பதில் சான்றாண்மை புலப்படுகிறது.

'விழையா உள்ளம் விழையும் ஆயினும்
என்றும் கேட்டவை தோட்டியாக மீட்டுஆங்கு
அறனும் பொருளும் வழாமை நாடி
நற்கதவு உடைமை நோக்கி மற்றதன்
பின் ஆகும்மே முன்னியது முடித்தல்
அனைய பெரியோர் ஒழுக்கம்'
(அக.பா.எ-286)

இயல்பாகவே தீயனவற்றை விரும்பாத பெரியோரின் உள்ளம் எப்போதாவது அவற்றை விரும்பினும் அறத்தை அங்குசமாகக் கொண்டு யானை என்னும் ஐம்பொறிகளை அடக்குவர். அறத்தையும் பொருளையும் தக்கவழிகளில் நாடி தமக்கு வேண்டியவற்றை முறையாகச் செய்து கொள்வர். ஆராய்ந்து தீநெறிகளை விலக்கி நன்னெறிகளைப் பின்பற்றுவர். இதுவே பெரியோர் ஒழுக்கம். நினைத்ததைச் செய்துமுடித்தல், மனத்தை அடக்குதல் இரண்டும் வெவ்வேறு எல்லைகளைக் கொண்டது. நினைத்ததை முடிக்கும் செயலில் ஆதிக்கவுணர்வு மேம்பட்டிருப்பினும் அறத்தைப் பின்பற்றுவதில் அடக்கம்

இருப்பதாலேயே சான்ழிறோர் எனப்பட்டனர். அறத்தையும் பொருளையும் மிகுதியாக உடைமை கொண்டவர்கள் சான்றோர்கள். இவர்கள் அரசராகவோ, அந்தணராகவோ, வணிகராகவோ இருந்தார்கள். மன்னராட்சி காலத்தில் கல்வி, கேள்வி, அனுபவத்தில் வெற்றி பெற்ற சிறந்த இலட்சிய ஆண்களே சான்றோராக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

'பலரோடு உண்ணும் உடைப்பெருஞ் செல்வர்களான இவர்கள்'

(புற.பா.எ-188)

'ஆன்று ஆய்ந்து அடங்கிய கொள்கை உடையவர்கள்'

(புற.பா.எ-191)

என்ற புறப்பாடல்களின் வாயிலாக சான்றாண்மை என்பது அடக்கம் (அறம்), ஆதிக்கம் (செல்வம்) என்ற இரு எல்லைகளைக் கொண்டதை அறியமுடிகிறது.

**சான்றோரின் இயல்புகள்:**

'உண்டாலம்ம ! இவ்வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலர் முனிவு இலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி
புகழெனின் உயிருங் கொடுக்கவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர் ;
இன்னமாட்சி அனையராகி
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே '

(புற.பா.எ-182)

என்ற கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி இயற்றிய பாடலின் வாயிலாக சான்றோர்கள் அமிழ்தமாயினும் தனித்துண்ணாமல் பகிர்ந்துண்ணுவர். புகழுக்காக உயிரையும் கொடுப்பர். பழி ஏற்படுமாயின் உலகுடன் பெறினும் இணையமாட்டர். சுயநலமின்றி பிறருக்கென வாழ்பவர் போன்ற கருத்துகள் வெளிப்படுகின்றன.

பிறர் தம்மைப் புகழக் கேட்பின் தலைகுனிதல் (கலி.பா.எ-119), உலகம் பேணுபவற்றைப் பேணுதல் (நற்.பா.எ-72 , பிறர் துன்பத்தைத் தம் துன்பமாய் கருதுதல் (அக.பா.எ -382) , கடமை தவறாதவர் (நற்.பா.எ -327) ஆன்றோரின் அறவழியில் ஒழுகுபவர்(நற்.பா.எ-

*196),; .பொய்சாட்சி கூறார் (குறு.பா.எ-184) , பிறரின் குறைகளை நோக்கும் போது தன் குறையை முதலில் உணர்வர் (நற்.பா.எ-116),*

*நின்ற சொல்லர் (நற்.பா.எ-1) போன்ற அகப்பாடல்களின் வாயிலாகவும் அறங்களைப் பின்பற்றும் சான்றோர்களின் இயல்புகளை அறியமுடிகிறது.*

*‘செற்றமும் உவகையும் செய்யாது காத்து*
*ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகி*
*சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்‘*
*(மதுரைக்காஞ்சி .490-492)*

*செற்றம், உவகையின்றி நெஞ்சினைப் பாதுகாத்து துலாக்கோல் போன்;ற நடுவுநிலைமையுடையவராய் தருமநூலைச் சொல்லும் சான்றோர்களும் மதுரை நகரில் வாழ்ந்தனர். இப்பாடலின் மூலமாக சான்றோர் செற்றம், உவகை போன்;றவற்றில் பிறழாமல் தன்னைக் காத்துக் கொள்ளும் விதிகளால் பகை, நட்பு, நொதுமல் என்ற முத்திறத்திலும் பிறழாமல் தீர்ப்புரைக்கும் அமைதியுடையவர் என்ற கருத்து பெறப்படுகின்றது. மக்கள் அறநெறி பிறழாமல் வாழ்வதற்கு அறம் கூறும் அவையங்களே காரணமாகிறது. சான்றோர் தாம் அறநூல் காட்டிய வழியில் ஒழுகுவதோடு பிறரையும் அறநெறியைப் பின்பற்றுமாறு வலியுறுத்துவர் என்பது புலனாகின்றது.*

**ஆதிக்கமும் பொருளுடைமையும் :**

*இச்சங்க இலக்கியப் பாடல்களின் வழி நோக்கும்போது சான்றோர்கள் ஈகை, ஊக்கம், புகழ், நாணம், நடுவுநிலைமை, வாய்மை, வலிமை போன்ற குணங்களோடு மனத்தைக் கட்டுப்படுத்தக் கூடியவர்களாக திகழ்கின்றனர். இத்தகைய குணங்களை அனைவராலும் உடைமை கொள்ளவியலாது. பொருளுடைமையாளர்கள் தங்கள் உடைமையை நியாயப்படுத்தி அதனை அறஉடைமையாக மாற்றவதற்கு இவற்றைப் பயன்படுத்திக் கொண்டனர்.*

*‘அறன்அறிந்து ஒழுகும் அங்கணாளனைத்*
*திறன்இலார் உடுத்த தீமொழி எல்லாம்*
*நல்அவையுள் படக் கொட்டாங்கு..’*
*(கலி.பா.எ-144)*

*இப்பாடலின்படி சான்றோர்களைத் திறனில்லாதவர்கள் இகழ்ந்து தீமொழி கூறினும் அம்மொழிகள் சான்றோர்களின் அவையில் கெட்டு அழியும். அதாவது சான்றோர்க்கு*

வறுமை வராது. அப்படியே வரினும் அவர்களின் ஆதிககத்தில் குறை ஏற்படாது என்ற கருத்து பெறப்படுகின்றது.

'அறத்தகுதியும் அறக்குவிப்பும் மிகையான வசதியின் அதிகாரம். இந்த மிகையான வசதியின் அதிகாரம் பிறரிடம் கேட்பதல்லாம் கீழ்ப்படிதலையே'

(ராஜ்கௌதமன் - தமிழ்ச்சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப.எ: 258)

என்னும் நீட்சேவின் கருத்துப்படி மிகைவசதி தன் அதிகாரத்தை அறநடத்தையாக மாற்றிக் கொள்கிறது. அதிகாரத்தின் அமைதியான தோற்றத்தை வெளிக்காட்டும் அறநடத்தைகள் மற்றவர்களைத் தம்மை அறியாமலே ஆதிக்கத்திற்கு முன் கீழ்ப்படிய வைக்கின்றன. சான்றாண்மை

என்னும் பண்பு பிறரைக் கீழ்ப்படுத்தும் அமைதியான ஆயுதமாக திகழ்ந்திருக்கிறது.

அறங்கள் என்னும் சட்டத்தைக் கொண்டு நோக்கும் போது சமூக ஒழுங்கும், சமூக உறவுகளும் இயல்பானவை. மாற்றத்தை ஏற்காதவை என்ற கருத்து புலனாகின்றது. மன்னராட்சிக் காலத்தில் சான்றாண்மை என்ற அறத்தைப் பொறுத்து அதிகாரமும், சமூக மதிப்பிடுகளும் அமைந்தன. பிறரை, உலகை ஆளுவதற்கு தன்னை ஆளுதல் அடிப்படையானது. அதாவது தன்னை, தன் பொறிகளை, விருப்பத்தைக் கட்டுப்படுத்தி அறத்தைப் பின்பற்றுதல் இன்றிமையாதது. நாகரிக சமுதாயத்தில் உயர்ந்த விழுமியமாகப் போற்றப்படும் உடைமையும், ஆதிக்கவுணர்வும் கொண்டவரிடத்தில் சான்றாண்மை இருந்ததை அறியமுடிகிறது. இச்சான்றாண்மை அறத்தின் வாயிலாக மன்னராட்சிக்குப் பாதகமான சக்திகள் அழிக்கப்பட்டிருக்கலாம். சான்றோரின் கருத்து மக்களை நெறிப்படுத்தி அவர்களை அடக்கியாளப் பயன்படுத்தப்பட்டுள்ளது புலனாகின்றது.

## குறிப்புகள்

1. அகநானூறு - உரையாசிரியர் புலவர் அ. மாணிக்கனார்
2. கலித்தொகை - உரையாசிரியர் முனைவர்.அ.விசுவநாதன்
3. குறுந்தொகை - உரையாசிரியர் முனைவர்.வி.நாகராசன்
4. குறள்நெறி அறம் - புலவர் கே.ஏ.ராஜீ
5. நற்றிணை - உரையாசிரியர் முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன்
6. தமிழ்ச்சமூகத்தில் அறமும் ஆற்றலும் -ராஜ்கௌதமன்
7. பத்துப்பாட்டு - உரையாசிரியர் முனைவர்.வி.நாகராசன்
8.புறநானூறு - உரையாசிரியர் முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன்